விலை ரூபா: 10.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி 08 | வெள்ளிக்கிழமை (23.12.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 04

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## தமிழ்த்தேசிய அமைப்பாளர் யாழ்.நகரில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் நேற்று அதிகாலை குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று அதிகாலை 5.30 மணியளவில் சிறிலங்கா அச்சக ஒழுங்கையில் உள்ள பத்திரிகை நிறுவனத்திற்குச் சென்ற வேளையில் அவரைப் பின் தொடர்ந்து சென்ற இனந்தெரியாதோர் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். சுடப்பட்ட அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

பகுதி நேரப் பத்திரிகை விநியோகஸ்தரான அவர் பத்திரிகையை எடுத்துச்செல்ல சென்ற சமயமே சுடப்பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் தமிழ்த்தேசிய எழுச்சி நடவடிக்கைக் குழுவின் யாழ்.மாவட்ட அமைப்பாளரான என்.நவரட்ணம் (வயது 47) என அடை யாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று காலை சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் சரோஜினி இளங்கோவன் மருத்துவ பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு யாழ்.பொலி (12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பள்ளிமுனைக் கடலில் கடற்படையினர் மீது தாக்குதல்

### மூன்று கடற்படைச் சிப்பாயை காணவில்லையாம்?

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனை கடற்பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு ரோந்துப் படகுகள் மீது இனந்தெரியாதோர் தாக்குதலை நடத்தியதுடன் 3 கடற் படையினரை கடத்திச் சென்றுள்ளனர்.

சுற்றுக்காவல் நடவடிக்கையினை முடித்துக்கொண்டு முகாமுக்குத்திரும்பிக் கொண்டிருந்த இரண்டு படகுகளில் ஒரு படகில் இருந்த மூவரே கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் மற்றப்படகில் இருந்த மூவரும் கடலில் பாய்ந்து தப்பியபோது கடற்படை சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளதாக இராணுவத் தரப்பு தெரிவித்தது.

4படகுகளில் வந்த விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தியதாக கடற்படையினர் தெரிவித்தனர். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசமான மன்னார் பள்ளிக்குடா கடற்பகுதியில் கடற்புலிகளின் படகொன்றை நேற்றுக்காலை கடற்படையினர் தாக்க முற்பட்டபோது தற்பாதுகாப்புக்காக புலிகள் திருப்பித்தாக்கியதில் கடற்புலி வீரர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அத்துடன் இம் மோதலில் காயமடைந்த கடற்படைச்சிப்பாய் ஒருவர் விடுதலைப்புலிகளினால் பிடிபட்டுள்ளதாக விடுதலைப்புலிகளின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

பள்ளிமுனை கடல் ஓரத்தில் கடற்படை முகாமுக்கு அருகில் நடைபெற்ற சம்பவத்தில் கடற்படையினர் எதிர்த் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவம் மீது பரவலாகச் சூடு

# பதிலுக்கு மக்கள் மீது தாக்குதல்

## மரண பயத்தில் யாழ்ப்பாண மக்கள் மௌனம் சாதிக்கிறது க.கா. குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் இராணுவத்தினர் மீது நேற்றுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கிரனைட் மற்றும் துப்பாக்கிகள் கொண்டு இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாக்குதலினையடுத்து பொதுமக்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தினர். துப்பாக்கிச் சூடு மற்றும் பொல்லுகள், ஆயுதங்கள் என்பனவற்றைக் கொண்டு இராணுவத்தினரால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 10 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினரை மீட்க சர்வதேசத்தின் உதவி

(கொழும்பு)

மன்னாரில் நேற்றுக்காலை கடத்தப்பட்ட மூன்று கடற்படையினரையும் மீட்க சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மன்னாரில் கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தி மூன்று கடற்படையினரை கடத்தியுள்ளதை விடுதலைப்புலிகள் மேற்கொண்டிருக்கும் ஒரு யுத்த நடவடிக்கையாகவே நாம் கருதுகின்றோம்.யுத்த நிறுத்த ஒப்பந்தசரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி எமது கடற் படை படகுகள் தமது பணிகளை மேற்கொண்டபோது தாக்கப்பட்டுள்ளன. இத்தாக்குதலை விடுதலைப் புலிகள் திட்டமிட்டு நடத்தி மூவரைக் கடத்தியுள்ளனர். இது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறிய செயலாகும் என அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

## யாழ்ப்பாணத்தில் இயல்புநிலை திரும்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்

### நோர்வேக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்



(கிளிநொச்சி)

இராணுவ வன்முறைகளால் தமிழர் தாயகத்தில் சீர்குலைந்து போயுள்ள இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டு வருவதற்கு அனுசரணையாளரான நோர்வே அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கு சு.ப.தமிழ்ச் செல்வன் கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தமிழர் தாயகத்தில் பொது மக்கள் மீதான இராணுவ வன்முறைகள்.அதிகரித்து வருகின்றன. இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயமாக உள்ள பகுதியில் கடற்படையால் இளம் பெண்கள் கடத்தப்பட்டு கொடூரமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சமாதான (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் சுற்றிவளைப்புத் தேடுதல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பகுதியில் கிளைமோர் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக நேற்று இராணுத்தினரால் பாரிய தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை மருத்துவமனையை அண்மித்த பொன்னாச்சி கடைச் சந்திப் பகுதியில் கிளைமோர் மறைத்து வைக்கப்பட்டதாக கூறி அப்பகுதியில் பெருமளவில் கடற்படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டனர்.

அப்பகுதி போக்குவரத்தும் காலை முதல் நிறுத்தப்புட்டது. இதனால் யாழ்ப்பாணத்துடனான ஊர்காவற்றுறைப் போக்குவரத்து தடுக்கப்பட்டது. (ச)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# மறவாமை தந்த மகத்துவம்

ஒருநாள் ஆனாயர் ஆவினங்களை வழமைபோல முல்லைப் புறவக் காட்டிற்குக் கூட்டிச் சென றார்.ஆனாயர் ஆயர் குலத்தில்



அவதரித்தமையால் கோவினங்களைக் காக்கும் கொள்கையை மேற்கொண்டார்: நாள்தோறும் பசுக் கூட்டங்களை முல்லை நிலக் காட்டில் நல்ல புல்லை மென்று தின்ன மேய்ப்பார்.

காட்டிலுள்ள கொடிய விலங்குகளாலும் பொருந்தும் நோய்களாலும் கோவினங்களுக்கு வரும துன்பங்களை வராமல் விலக்குவார். நல்ல நீர் நிலைகளில் தண்ணீர் உண்பிக்க உடன் அழைதத்துச் செல்வார் ஆனாயர்.

ஆனாயர் தமது மனம்,வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் பறறற்றான் தாள்களைப் பற்றுவது அன்றி மற்றொன்றில் பற்றில்லாதவர்.

ஆனாயர் கோவினங்களைக் குறைவறக் காக்கும் காலத்தில் சிவபெருமானுடைய திருவடிகளில அகலா அன்பினோடு புல்லாங்குழல வாசனையை மேற்கொள்வார்.

ஆனாயர் அன்று ஆனிரைகளோடு முல்லைப் புறவினில் ஒரு செழித்த கொன்றை மர அருகாக அணைந்தார். கொன்றை மரத்தின கிளைகள் கீழே தாழ்ந்திருந்தன. கொம்பர்களில் மலர்ந்த மலர்களில் மது மாந்தும் சுரும்புகள் மருண்டிசை பாடித் திரண்டு சூழ்ந்தன.

கையினாற் கட்டிய மணங்கமழும் மாலை போலப் பூங்கொத்துகளைத் தொங்கவிட்ட கொன்றை மரம்- பக்கங்களில் தாழ்ந்து விளங்கும் சடைகளையுடைய சிவபெருமானாகக் கோவலனாருக்குக் காட்சி கொடுத்தது. சிந்தையைச் சிவத்திற் காக்க நெஞ்சம் நெகிழ்ந்தது. உள்ளம் உருகியது. கள்ளமில்லாத அன்பு வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஆனாயனாருக்கு சிவபெருமானிடத்தில் அன்புப பெருக்கச் சிறை பெரு நீர் போல் சிந்தை வாய்ப் பாய்ந்தது. அன்பினிற்கு அளவு காணர்.

ஆனாயர் எடுத்தார் வேங்குழல். மடுத்தார் வாயில் தொடுத்தார் இசையை.விடுத்தார் மாதுரிய இசைநாத வெள்ளத்தை, சிவபெருமானுடைய திருவைந்தெழுத்தை பண்ணிசை சுமக்கும் உள்ளுறையாக உருவகித்தார்.

மண்ணுலகிலும் விண்ணுலகிலும் ஏனைய உலகுகளிலும், அன்பினில் ஊறிப் பொங்கும் அமுத இசையினைத் தரும் புல்லாங்குழல தரும் நாத வெள்ளம் தெள்ளிய தேனாமிர்தத்தைச் செவியில் வார்ப்பது போல நிறைத்தது.

ஊனினை உருக்கியது, உள்ளே ஊடுருவச் சென்று உள்ளொளியைப் பெருக்கியது. பொறி புலன்களைச் சுருக்கியது.

அண்ட புவனம் எங்கும் ஒரே நிசப்தம், காற்று அசையாது. மரச் சினைகள அசையா, மலையருவிகளும் காட்டாறுகளும் சலசலக்க மாட்டாது. முகில் கூட்டம மழை பொழியாது. இடி முழங்கா கடல் துளும்பா, இவ்வாறு சரம் அசரம அனைத்தும் இசை மயமாகி ஒரே தன்மைத்தாயின.

கோவலனாருடைய குழலோசை பொய்யன்பினுக்கு எட்டாத பொன்னம்பல மெய்யருடைய திருச்செவியின் அருகில் அணையப் பெருகியது. கண்ணுதலார், ஆனாயர் குழலோசை கேட்டு அருட்கருணைத திருவுள்ளத் தவவல்லியாராகிய உமையம்மையாருடன் வான்வழி வந்தணைந்தார்.

இசை விரும்பும். கூத்தனார் ஆனாயர் எதிராக நின்றருளினார். 'இந்நிலையாக நம்மிடத்து அணைவாய்' என்று அருளிச் செய்து புண்ணியனார் பொற் பொதுவின் இடைப் புக்கார்.

அனைத்து வாழ்விற்கும் தாழ்விற்கும் மனமே காரணம் மனம் எனும் தோணியை வழிப்படுத்த அறிவு என்னும் கோலை ஊன்றா விட்டால் சூறாவளியில் சிக்கிய கப்பலாகிவிடும் வாழ்க்கை. பழுதோ பாம்போ எனப் பகுத்துக்காட்டுவது மனம். மன மாயைக்கு அப்பால் நின்று ஆனாயநாயனார் கொன்றை மரத்தைச் சிவனாராகக் கண்டு பெருவாழ்வு பெற்றார்.

" எந்நிலையி னின்றாலும்
எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன் தாள்
மறவாமை பொருள்"

என்பது பெரியபுராணம். □

## வெள்ளிநற்சிந்தனை

**சிவ சண்முகவடிவேல்**

# அசம்பாவிதங்கள் குறித்த அறிக்கை கல்வி அமைச்சரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

யாழ்.பல்கலைச் சமூகம் அண்மையில் மேற்கொண்ட அமைதி வழி ஊர்வலத்தின்போது ஏற்பட்ட அசம்பாவிதங்கள் தொடர்பான அறிக்கை கல்வியமைச்சர் சுசில் பிறேமஜெயந்தவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச சம்பவங்கள் குறித்த அறிக்கை துணைவேந்தரிடம பெற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அமைச்சரிடம கையளிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் பிரதித் தலைவர் பேராசிரியர் ரட்ணநாயக்க தெரிவித்துள்ளார்.இந்த அறிக்கையில், பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்த ஊர்வலம் படையினரால் குழப்பியடிக்கப்பட்டமை பேராசிரியர்கள்,மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக விரிவாகக் குறிப் படப்பட்டுள்ளது. (ந-8)

# சட்டவிரோத மின் பாவனையால் — ஹற்றன் மின்சபைக்கு 5கோடி நட்டம்

(கண்டி)

ஹற்றனில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 13பேர் மின்சார சபையின் விசேட தேடுதல் பிரிவினரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டதாக இலங்கை மின சாரசபை தெரிவித்துள்ளது.

இவர்களில் மூவர் இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் எனத் தெரிகிறது. கைதுசெய்யப்பட்ட 13 பேரும் 10இலட்சம் ரூபா மின் சாரசபைக்குச் செலுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'சட்டவிரோத மின்பாவனை காரணமாக ஹற்றன் நகரில் மட்டும் சுமார் 5 கோடி ரூபா மின்சாரசபைக்குச் செலுத்த வேண்டியிருப் பதாக நடவடிக்கைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சட்டவிரோத நடவடிக்கைக்கு இலங்கை மின்சாரசபையின பிரதேச முகாமைத்துவமும் ஊழியர்களுமே உடந்தையாக இருப்பதாக தேடுதல் பிரிவினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 13 பேரும் ஹற்றன் பதில் நீதவான் இராமமூர்த்தி முன்னிலையில் ஆஜர்படுததப்பட்டார்கள். சந்தேக நபர்களில் 12பேர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதவான் அவர்களுக்குத் தலா 5ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததோடு இவர்களால் மின்சாரசபைக்குச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

மற்ற ஒருவரை அடுத்தமாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (து-7)

## கட்டாக்காலிகளின் தொல்லை

(ஊரெழு)

ஊரெழு மேற்கு பகுதியில் கட்டாக்காலி ஆடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

இருபதிற்கு மேற்பட்ட கட்டாக்காலி ஆடுகள் பகலில் தோட்டங்களில் புகுந்து பயிரை அழிப்பதுடன் இரவில் வீடுகளில் புகுந்து பூக்கன்றுகளையும் அழித்து வருகின்றது.

இவை மழை காலங்களில் சன சமூக நிலையங்களுக்கு உள்ளே தங்குவதால் சனசமூக நிலையமும் அசுத்தமடைந்து காணப்படுகின்றது என அவ்வூர் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-25)

# இராசிபலன்

23.12.2005
(மார்கழி 08, வெள்ளிக்கிழமை)
ஸப்தமி முற்பகல் 9.48மணிவரை
உத்தரம் பின்னிரவு 2.50 மணிவரை
சித்தாமிர்தம் முற்பகல் 9.48 மணிவரை
இராகுகாலம் 10.55 - 12.55 மணிவரை
சுபநேரம் 6.52 - 7.55 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம்,எடுத்த காரியம் தாமதமாகும். |
| இடபம் | நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய நன்மை, கூட்டு முயற்சி. |
| மிதுனம் | மனோசங்கடம், அதிகசெலவு, ரோக நிலை, திடீர் நன்மை. |
| கடகம் | மாதர் நட்பு, வெகுமானம், நல்லமுயற்சி, தெய்வசிந்தை. |
| சிங்கம் | உஷ்ணநிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், சுபசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், தனதானிய சேர்க்கை, ஆனந்தம். |
| துலாம் | ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய சித்தி, நன்கொடை. |
| விருச்சிகம் | நிலைமாற்றம், புத்திரரால் கவலை, பிரயாணம், பணவிரயம். |
| தனுசு | அபகீர்த்தி, காரிய தடங்கல், தர்மம், போசன சுகம். |
| மகரம் | நல்ல முயற்சி, தனலாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | காரிய அனுகூலம், கீர்த்தி, போசனசுகம், உற்சாகம். |
| மீனம் | தாழ்வுநிலை, முயற்சி தாமதம், தனிவிரயம், போசன சுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# மத்தியஸ்த சபைக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மக்களிடையே ஏற்படும் சாதாரண பிணக்குகளுக்கு இணக்கப்பாட்டுடன் தீர்வு காண்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை மக்களுக்கு அளிப்பதற்கு வசதியாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஓர் மத்தியஸ்த சபை அமைக்கப்பட்டு வருகின்றது.

இச் சபையின் பொதுவான செயற்பாடு சம்பந்தமாக பிரதேச மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கமாக கிராம மட்ட பிரதிநிதிகளுக்கான ஓர் கருத்தரங்கு எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்றி ஒத்துழைக்குமாறு நல்லூர்பிரதேச மத்தியஸ்த சபை தவிசாளர் எஸ்.ரி.பத்மநாதன் கேட்டுள்ளார்.

நல்லூர் பிரதேசத்திற்கான மத்தியஸ்த சபை ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. (து)

# விசேட பயிற்சிச் செயலமர்வு

(கொழும்பு)

அரசாங்க சேவையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பொதுமுகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு தத்தமது கடமைகள் தொடர்பாக விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு பொதுநிருவாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் இந்தப் பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்படவுள்ளதாக நிறுவனத்தின் பணிப்பாளர் சுனில் அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

முகாமைத்துவ உதவியாளர் சேவையில் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றி வரும் உத்தியோகத்தர்களுக்கு 27நாட்களைக் கொண்டதாக இந்தப் பயிற்சித் திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சிகளைப் பெற விரும்பும் உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 30 ஆம திகதிக்கு முன்னர் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டுமென்று அரசாங்க சேவை பயிற்சி நிறுவனத்தின் பணியாளர் கேட்டுள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் புதிதாக பொதுமுகாமைத்துவ உதவியாளர் சேவை உருவாக்கப்பட்டுள்ளது.

எழுதுவினைஞர்சேவை, தட்டெழுத்தாளர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை, களஞ்சியக் காப்பாளர் சேவை, சிறாப்பர் சேவை, கணக்குப் புதிவுநர் சேவை ஆகிய ஆறு இணைந்த சேவைகளை ஒன்றிணைத்தே புதிய முகாமைத்துவ உதவியாளர் சேவை தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(த-9)


# வேலை வாய்ப்பு-2005

1.பிரதேச செய்தியாளர்கள்(ஆண்கள்)
2.அலுவலகச் செய்தியாளர்கள்(இருபாலாரும்)
3.விளையாட்டுத்துறைச் செய்தியாளர்கள்(இருபாலாரும்)
4.உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)

கல்வித்தகைமை:-க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி
குறிப்பு:-பத்திரிகைத்துறை அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5.பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (இருபாலாரும்)
6.சிற்றூழியர்கள்(இருபாலாரும்)
7.ஒவ்செற் பயிலுநர் (ஆண்கள் மட்டும்)

கல்வித்தகைமை:-க.பொ.த(சாதாரணம்)

விண்ணப்பிக்கும் பதவியுடன் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை,

நிர்வாக உத்தியோகத்தர், வலம்புரி,
இல.3,2ஆம் ஒழுங்கை,யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 31.12.2005க்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்.




நேற்று அதிகாலை காங்கேசன்துறை வீதியில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டவரின் சடலம்...

# விடுதலைப்புலிகளின் நோக்கங்களை புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்

## -சபையில் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகளை மேற்கொள்ளும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் பிரபாகரனது நோக்கங்களைப் புரிந்துகொள்ள முற்படுதல் அவசியமானது என்று எதிர்க்கட்சி கொறடா மஹிந்த சமரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் வரவு -செலவுத் திட்டம் மீதான 7ஆம் நாள் விவாதத்தில் மஹிந்த சமரசிங்க பேசுகையில்,

கடந்த தேர்தலில் வடக்கு-கிழக்கில் எத்தகைய சூழல் இருந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆயிரக் கணக்கான மக்கள் வாக்களிக்க வரவில்லை. விடுதலைப் புலிகள் அந்த மக்களைத் தடுத்ததன் காரணம் என்ன? பிரபாகரன் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மன ஓட்டங்கள் என்ன? நோக்கங்கள் என்ன?

அமைதிப் பேச்சுக்களை மேற்கொள்கின்ற போது இவற்றை அவதானத்தில் கொள்வது மிகவும் அவசியமானது. இத்தகைய விடயங்களை நாம் புரிந்துகொள்ளாமல் நம்மால் ஒரு போதும்தம் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இது விடயததில் நாம் அனைவரும் இணைந்து படிப்பினைகளைப் பெறவேண்டும்.

ஒரு அரசியல் கட்சியால் மட்டுமே இதற்குத் தீர்வுகாண முடியாது. நாம் அமைதி முயற்சிகளில் உரிய தீர்வை எட்டாவிட்டால் வரலாறு நம்மை துரோகிகள் என்று அடையாளப்படுத்தும்.

அனைத்துக் கட்சிகளும் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டு ஒன்றிணைய வேண்டும்.வடக்கு அல்லது தெற்கு எந்தப் பிரதேச மானாலும் பயங்கரவாதத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. மனிதரால் மேற் கொள்ளப்படும் பாதிப்புக்கள் குறித்து ஆராய தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படுவது அவசியம். இதனால் மனிதரால் நிகழ்த்தப்படும் பாதிப்புகள் குறித்து திட்டவட்டமான முடிவை நாம் எட்ட முடியும்.

இந்தியாவுக்கான பயணத்தை மஹிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளவுள்ளார். இந்தியாவின் ஒத்துழைப்பின்றி இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இந்தியா எமது அயல்நாடு. அவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் இன்றியமையாதது. மஹிந்தவின இந தியப் பயணத்தின் மூலம் உடனடி சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்புகள் ஏற்படும் என்று நம்புகிறோம் என்றார்.(ற)

# உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

வவுனியா மாவட்டத்தின் எல்லைப்புறக் காட்டில் புனூர் பாலமோட்டையிலிருந்து 30 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரின் சடலத்தை மாங்குளம் தமிழீழக் காவல் துறையினர் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி கே.வி.கே.திருலோகமூர்த்தி மரண விசாரணையை நடத்தினார்.

இறந்த பெண் பஞ்சாபி ஆடை அணிந்துள்ளார். சடலம் உருக்குலைந்த நிலையில காணப்பட்டது. மரணம் சம்பவித்து ஒரு வாரமளவில் இருக்கலாம் என்று கிளிநொச்சி மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

காட்டிற்கு விறகு வெட்டச் சென்றவர்கள் முதலில் இச்சடலத்தைக் கண்டதாகக் கூறபபட்டது. கிளிநொச்சி மாவட்ட மருத்துவ அதிகாரி இ.தானந்தன் பிரேத பரிசோதனை மேற்கொண்டார்.

உடல் அடையாளம் காண்பதற்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இப் பெண்ணின் மரணம் குறித்து காரணங்கள் தெரியவில்லை.இப் பெண்ணின் மர்ம மரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தமிழீழக் காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர். (ற)

# கீழ்த்தர செயற்பாடுகள் ஊடாக சிங்கள தலைமைகள் சாதிக்க முயல்வதென்ன?

(கொழும்பு)

தமிழ்ப் பெண்கள் மீதான கீழ்த்தரமான செயற்பாடுகளினூடாக சிங்களத் தலைமைகள் எதை சாதிக்க முயல்கின்றன? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவர் பேசுகையில்,

தமிழ் மக்களுக்கு எதனையும் செய்யாமல் சர்வதேச ரீதியில் சமாதான விரும்பிகளாகச் சிங்களத் தலைமைகள் தங்களை வெளிக்காட்ட முயற்சிக்கின்றன.

வடக்கில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில படையினரின் நேரடித் தலையீடு நன்கு நிருபணமாகியுள்ளது.

இது தொடர்பாக மகளிர் விவகார அமைச்சு எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

படையினரின் அட்டகாசத்தினால் வடக்கில் பெண்கள் அச்சமடைந்த நிலையில் உள்ளனர். அன்றாட நடவடிக்கைகளைக் கூட மட்டுப்படுத்த வேண்டிய நிலைமை பெண்களுக்கு ஏற்பட்டுள்ளது.



பெணகள் மீதான கீழத்தரமான செயற்பாடுகளினூடாக சிங்களத் தலைமைகள் எதை சாதிக்க முயல்கின்றன, இரத்த வெள்ளத்தில் மிதக்கவே சிங்களத் தலைமைகள் விரும்புகின்றன. சர்வதேச ரீதியில் தம்மைச் சமாதான விரும்பிகள் எனக் காட்ட முயற்சிப்போரின் இத்தகைய செயற்பாடுகள் அனுமதிக்கத்தக்கதல்ல என்று குறிப்பிட்டார். (ற)

# பேச்சுக்கான இடம் முக்கியமல்ல பேச்சுவார்த்தையே முக்கியம் -மஹிந்த

(கொழும்பு)


இந்திய ஊடகவியலாளர்களை ஜனாதிபதி ராஜபக்ஷ நேற்று முன்தினம் சந்தித்தார்.

இச் சந்திப்பின் போது மஹிந்த ராஜபக்ஷ கூறியதாவது,

சமாதானப் பேச்சுவார்த்தையே ஜப்பன் நாட்டில நடத்த விடுதலைப்புலிகள் இயக்கம் விரும்பினால் பேச்சுக்களை நாளையே ஆரம்பிக்க தயாராக இருக்கிறேன்.ஆனால புலிகள் கோரிக்கை விடுக்கும் நோர்வே நாட்டில் அல்ல.பேச்சுவார்த்தைக்கான இடம் முக்கியமல்ல. பேச்சுவார்த்தையே முக்கியம் என்றார் மஹிந்த ராஜபக்ஷ.



மேலும் தனது இந்திய பயணத்தின் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸவரன் ஆகியோருடன் வருவதாகவும் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். (ற)





சமூகப்பற்றாளர் சி.வி.சின்னத்தம்பியின் 31ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டத்தில மலரஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அமரரின் படத்தையும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## 17 ஆண்டுகளுக்கு முன்னைய

# ஒன்பது பேர் படுகொலை வழக்கு; 5 பேருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் 9 பேர் படுகொலை செய்யப்பட்ட 17ஆண்டுகளுக்கு முன்னைய வழக்கில் 5 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி வலப்பனை கும்புக்வல என்ற கிராமத்தில் ஐககிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் 9 பேர் வெட்டியும் குத்தியும் துப்பாக்கியால் சுட்டும் படுகொலை செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக 15நபர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

கண்டி மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும். சந்தேக நபர்களுக்கு எதிராக 29 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

கண்டிமேல் நீதிமன்ற நீதிபதி டி.எஸ். சி.லேககம்வம முன்னிலையில் நடைபெற்ற விசாரணைகளில் போதிய சாட்சியங்களின்றி 10சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

5பேருக்கு எதிராகத் தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்பட்டன. விசாரணைகளின் முடிவில் நேற்று முன்தினம் நீதிபதி லேக்கம்வம, ஐவருக்கும் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (ற)

# அமைச்சர் பௌசி தலைமையில் — முஸ்லிம் எம்.பிக்களின் ஒன்றியம் உதயம்

(கொழும்பு)

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு பொதுத் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள இணக்கம் கண்டுள்ளனர்.

இநதத் தகவலை ஊடகத்துறை துணையமைச்சர் சேகு இஸ்ஸதீன் வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் திங்கட்கிழமை கூடிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதியிலும் வாழும முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தனர்.

இதன் பின்னர் முஸ்லிம்கள் சம்பந்தமாக பொது இணக்கப்பாடு ஒன்றை எட்டும் வகையில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் என்ற பெயரில் கூட்டு இயக்கசபை ஒன்றை அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

இநத ஒன்றியத்தின் தலைவராக அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியும் துணைத் தலைவர்களாக அமைச்சர் பேரியல் அஸ்ரப் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமும் தெரிவாகினர். (ற)

# இன்று ஒரு தகவல்

## ஞாபகம்

ஒரு நண்பர் யாருக்கோ தொலைபேசி எடுத்துக் கொண்டிருந்தார். அவர் கதைத்து முடித்ததும் நான் அவரைப்பார்த்ததும் “இப்போது தொலைபேசியில் கதைத்தீர்களே.. அந்த இலக்கம் என்ன?” என்று கேட்டேன். அவர் தலையைச் சொறிந்துகொண்டார். ஞாபகம் வரவில்லை “ சரி சார்! அதை விடுங்கள் உங்கள் மனைவியின் பெயர் என்ன?” என்று கேட்டேன். “மாலதி என்றார். என்ன சார் இது வேடிக்கை கொஞ்ச நேரத்திற்கு முன்பு பேசிய தொலை பேசி இலக்கம் மறந்துவிட்டது. எப்போதோ கல்யாணம் செய்த மனைவியின் பெயர் மறக்கவில்லை அதைச் சரியாகச் சொல்லிவிட்டீகளே” என்றேன்.

அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். அவர் அப்படி என்னைப் பார்த்ததில் ஒன்றும் தவறில்லை ஏனென்றால் நாம் எல்லோரும் அப்படித்தானே! ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக தொலைபேசி எடுக்கிறோம். அதன் பின் அந்த இலக்கம் நமக்கு அநாவசியம் அதனால் மறந்து விடுகிறோம். இதற்குப் பெயர் தற்காலிக ஞபாகம். ஆனால் மனைவியின் பெயரை மறந்து விட முடியுமா ? முடியாது.... அது அவசியமான ஒன்று அடிக்கடி அந்தப் பெயரை உபயோகப் படுத்துகிறோம். அதனாலும் அது முக்கியம் என்பதனாலும் அதை மறப்பதில்லை இதற்குப் பெயர் நிரந்தர ஞாபகம்.

சரி இந்த தற்காலிக ஞாபகம் நிரந்தர ஞாபகம் இந்த இரண்டு ஞாபகம் அளவுகளையும் கட்டுப்படுத்துவது அது? மூளைக்குள் நடக்கும் மின்சார நடவடிக்கைகள்தான்! தற்காலிகஞபாகம் ஒரு மின்னல் மாதிரி தோன்றி மறைகிறது நிரந்தர ஞாபகம் .ஒரு படிவம் போல் மூளையில் படிந்துவிடுகிறது ஒரே சம்பவத்தின் பல பிரதிகள் மூளையில் பல்வேறு பகுதிகளிலும் படிவதனால் ஒன்று மறைந்தாலும் மறந்தாலும் இன்னொன்று மறைவதில்லை.

இப்படிப்பட்ட நிலைமையில்தான் தொண்டையில் இருக்கிறது வாய்க்கு வரமாட்டேன் என்கிறது சார் என்பார்கள் . ஒருவருக்கு எந்தத்துறையில் ஆர்வமும் ஈடுபடும் அதிகமோ அது சம்பந்தமான ஞாபகசக்தி அதிகமாக இருக்கும் தொழிலை விரும்பும் ஒரு தொலைபேசி இயக்குநருக்கு எண்கள் எல்லாம் நன்றாக நினைவிருக்கும் அது போல் கவிஞர்களுக்கு வார்த்தைகள் நன்றாக நினைவில் இருக்கும்.

இது ஒரு பக்கமிருந்தாலும் ஒரு மூளை எண்களை விட எழுத்துக்களை விட படங்களை மிகவும் சுலபமாக நினைவில் வைத்திருக்கிறது. புரிந்து கொள்ளும் தன்மை , அனுபவம் , புத்திக்கூர்மை இது கூடிக்குறைவதைப் பொறுத்து ஞாபகசக்தியும் ஏறும் இறங்கும் ! இப்போது உதாரணத்திற்கு ஒரு சிறுவனுக்கு படித்த எதுவும் நினைவில் இல்லாவிட்டால் அவன் அதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம்.

மறதி என்பது எந்த சமயத்தில் ஒரு பிரச்சினையாகிறது தெரியுமா? உங்களுக்கு வேண்டப்பட்ட ஒருவரை ஞாயிற்றுக்கிழமை மாலை சரியாக ஐந்து மணிக்கு பூங்காவிற்கு வரச் சொல்லிவிட்டு அந்த நேரத்தை மறந்துவிட்டால் அது பரவாயில்லை! வரச் சொன்னதையே மறந்துவிட்டால் தான் நிலைமை மோசம் என்று அர்த்தம் இப்படி இருந்தால் இது சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டிய நிலைமை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆமாம்... இதற்கும் மருந்திருக்கிறது ...ஆனால்... மூளை குறிப்பிட்ட அளவுக்கும் கீழே இயங்கும் போது நியூரோட்ரன்ஸ் மீற்றர் என்ற மூளை இரசாயனம் மிகவும் குறைந்து போகும் போது மட்டும் தான் உபயோகப்படும் . டாக்டர் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? மூளையைப் பொறுத்த வரைக்கும் அதில் ஞாபக சக்தி அதிகமாக உள்ள மூளை மறதியுள்ள மூளை என்றெல்லாம் ஒன்றும் கிடையாதாம் . நினைவு வைத்திருப்பதற்குப் பயிற்சியளிக்கப்பட்ட மூளை பயிற்சி அற்ற மூளை என்று வேண்டுமானால் கூறலாம். அதனால் நமது ஞாபக சக்தி என்பது நம்மிடமுள்ள பயிற்சி முயற்சி இதைப் பொறுத்துத்தான் அமையும்.

ஒருவர் ஒரு பென்சிலை எங்கேயோ வைத்துவிட்டுத் தேடிக்கொண்டிருந்தார். பின்பு எதையோ தீவிரமாக யோசித்து அதை ஞாபகப்படுத்திப் பார்த்துக்கொண்டிருந்தாராம். எதிரில் இருந்தவர் பென்சிலைத்தானே தேடிக்கொண்டிருக்கிறீர்கள் அது உங்கள் வலது காதில் இருக்கிறது சார் என்றாராம்.

“பென்சிலை வலது காதில் தான் வைத்திருக்கிறேன் என்பது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது ஆனால் அது வலது காது என்பதை மறந்து விட்டது. அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்” என்றாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வட-கிழக்கில் நெருக்கடிகளைத் தணிக்க

# அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தேசிய சமாதானப் பேரவை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் அதிகரித்து வரும் நெருக்கடி நிலைமையினைத் தணித்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட தரப்புக்களையும் சேர்த்துக் கொண்டு சமாதானத்தை உறுதி செய்யக் கூடிய சர்வதேச கண்காணிப்பாளர்களின் மேற்பார்வையில் பாதுகாப்பு நிலவரத்தைக் கையாளக்கூடிய உள்ளூர் மட்டச் சந்திப்புக்களை மீண்டும் தொடங்குமாறும் தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடமும் விடுதலைப்புலிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சமீபத்தில் இடம்பெற்ற படுகொலைகள், வன்முறைகள், தபாலியல் வல்லுறவுகள் போன்றவற்றை அந்த அமைப்புக் கண்டித்துள்ளது.

தத்தமது அங்கத்தவர்கள் இவ்வாறான செயல்களை மேற்கொண்டால் அவற்றை உடனடி யாகத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் வலியுறுத்தியுள்ளது.

சமீபத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை நியமித்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் நடவடிக்கைகளை வரவேற்பதாக தேசிய சமாதானப் பேரவை மேலும் தெரிவித்துள்ளது. (ற-7)

# க.கா.குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.மாவட்ட அரசியல்துறை வேண்டுகோள்

(கிளிநொச்சி)

இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு தமிழர்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்.. மாவட்ட அரசியல்துறையினர் வெளியிட்டுள்ள அறிக்கை,

யாழ்ப்பாணத்தில் இயங்கும் போர் நிறுத்த கண்காணிப்பு குழு போர் நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படுவதை கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் ஐரோப்பிய நாடுகளான நோர்வே, சுவீடன் , பின்லாந்து , டென்மார்க் , ஐஸ்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றுள்ளனர். நோர்வே ஸ்ரீலங்கா அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அனுசரணையாளராகவுள்ளது.

ஸ்ரீலங்கா படையினரதும் காவல்துறையினரதும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் குழுக்களினதும் கட்டு மீறிய இச் செயற்பாடுகள் போர் நிறுத்த உடன்படிக்கையை மிக நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளன

அத்துடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணிகளுக்கு நேரடியான இடையூறுகளை விளைவிக்கின்றன.

போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் பணிகள் ஸ்ரீலங்காப் படையினரின் அராஜகத்தையும்மக்கள் மீதான பயங்கரவாத வன்முறைகளையும் வெளிக்கொண்டு வருவதுடன் தமிழர் தரப்பின் நியாயப்படுகளையும் அனைத்துலக அரங்கில் தெளிவுபடுத்துகின்றன.

எனவே இதற்கான வாய்ப்பினை அதிகரிக்கும் வகையில் போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினரின் சுதந்திரமான பணிகளுக்கு எவ்வகையான அழுத்தங்களையும் நெருக்கடிகளையும் இடையூறுகளையும் விளைவிக்காது இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்பு முவினருக்கும் அவர்களது கண்காணிப்பாளர்களுக்கும் தமிழ் மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ். மாவட்ட அரசியல்துறையினர். கேட் டுக்கொள்ளுகின்றனர் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

## மேல் மாகாண மக்கள் முன்னணி பெயர் மாற்றப்பட்டுள்ளது

(கொழும்பு)

மேல் மாகாண மக்கள் முன்னணியின் பெயர் மேலக மக்கள் முன்னணி என்று மாற்றப்பட்டுள்ளதாக அதன் தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் கூறியதாவது,

இந்தப் பெயர் மாற்றம் பாரிய அரசியல் அர்த்தத்தை உள்ளடக்கியது.

இலங்கையில் வடக்கு-கிழக்கு என்ற தமிழீழம் ஒரு அரசியல் தளமாகவும் மலையகம் ஒரு அரசியல் தளமாகவும் மேற்குக்கரை ஒரு தளமாகவும் இருக்கிறது. இந்த மேற்குக்கரை என்பதைத்தான் 'மேலகம் என்று குறிப்பிடுகிறோம்.

மேல் மாகாணம் என்று சொல்கிற போது ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தை மட்டும் சொல்கிற புவியியல் அர்த்தத்தில் உள்ளது. இதை மேலகம் என அரசியல் அர்த்தத்துடனான பெயராக மாற்றி உள்ளோம் என்றார் மனோ கணேசன். (ற)

## வருமான வரித் திணைக்களம் நவீன மயப்படுத்தப்பட வேண்டும்

### பி.வி.ஜெயசுந்தர

(கொழும்பு)

நாட்டின் எதிர்கால அபிவிருத்தியை விரைவு படுத்துவதற்காக வரி செலுத்துவோருக்கும் வரி நிர்வாகத்தினருக்குமிடையிலான தொடர்பை வலுப்படுத்தவேண்டுமென நிதியமைச்சின் செயலாளர் பி.வி. ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அபிவிருத்தியின் பலன்கள் உயர் வருமா னம் பெறுவோரின் நன்மைக்காகவே பயன்படுத்தப்படுகின்றது.

இதேவேளை, அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டுமெ னின் வருமான வரித் திணைக்களத்தின் நடவடிக்கைகள் நவீன மயப் படுத் தப்படவேண்டும்மென்றும் பி.வி.ஜெயசுந்தர மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

## போதைப்பொருள் கடத்தலை தடுக்க பொதுமக்களின் உதவி பெறப்படும்

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்தலை ஒழிப்பதற்கான திடீர் சோதனைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையை வெற்றி பெறச் செய்வதற்கென பொதுமக்களின் உதவியை பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கோரியுள்ளார்.

கடத்தல்க்காரர் சம்பந்தமான சரியான தகவல்களைப் பொலிஸார் பெற்றால் அவர்களுக்கு எதிரான நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொள்ளமுடியும்.

கொழும்பில் போதைப் பொருளை விநியோகித்த முக்கிய நபர் ஒருவரைப் பொலிஸாரின் போதைப் பொருள் தடுப்புப் பணியகம் சமீபத்தில் கைது செய்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் குறைந்த வருமானம் பெறுபவர்களும் உயர்மட்ட வர்க்கத்தினருமே போதைப் பொருளுக்கு அடிமையாகி உள்ளமை தெரியவந்துள்ளது.

இவர்களுக்கு புனர்வாழ்வளிக்கவென நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களின் அனுசரணையுடன் புனர்வாழ்வு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## உணவுப்பொருள் வழங்கல்

ஊரெழுவில் சமுர்த்தி முத்திரைக்கான உண வுப் பொருள்கள் கடந்ததிங்கட்கிழமை தொடக் கம் ஊரெழு ப.நோ.கூ.சங்கக் கிளை 30 இல் வழங்கப்படுகின்றது. (த-25)

# கங்கை அமரன் பயிற்சிப் பாசறையில் 6வது படையணியின் பயிற்சி நிறைவு


(வடமராட்சி)

கங்கை அமரன் பயிற்சிப் பாசறை தற்காப்பு பயிற்சியினைப் பெற்ற 6 வது படையணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் மருதங்கேணியில் நடைபெற்றது.

பி.ப 3.00 மணியளவில் தொடங்கிய நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழக் கடற்படையின் தளபதிகளில் ஒருவரான பகலவன் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படையின் துணைப் படையினரின் அணிவகுப்பு நிகழ்வுகளும் தற்காப்பு பயிற்சி நிகழ்வுகளும் இடம்பெறறன. வடமராட்சி வடக்கு இம்பிலிட்டியைச சேர்ந்த 110 பேர் கொண்ட மக்கள் குழுவே இப்பயிற்சியினை நிறைவு செய்து வெளியேறியுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புரையினை தமிழழ விடுதலைப்புலிகளின் கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல சூசையும் தமிழீழ தேசிய தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர் வீரா, தமிழீழ தேசியக் தொலைக்காட்சி நிறுவனப் பணிப்பாளர் தவா ஆகியோரும் நிகழ்த்தினர். தொடர்ந்து துணைப படை போராளிகளுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இவர்களுக்கான பரிசில்களை தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல் சூசை வழங்கி கௌரவித்தார்.









இத்துடன் நிகழ்வின் இறுதியில் ஊடகவியலாளர்களுக்கு விடுதலைப்புலிகளின் முக்கிய போராளிகள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

தமிழீழக் கடற்படையின் தளபதியான வினாயகம் தலைமையில் பயிற்சி நிறைவேறியது. அடுத்த அணியினர் இராணுவப் பயிற்சியினை பெறுவதற்கு தயாராகவுள்ளனர். யாழப்பாணத்தில் நடைபெறும் சிங்கள இனவாதிகளால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றியும் தற்காப்பு படையணிக்கு இப் பயிற்சியின் முக்கியத்துவம் பற்றியும் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் விளக்கினார். (ற)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(பொன்னாலை)

அராலி மத்தி- ஊரத்தி வண்ணவேல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மாலை 4மணிக்கு ஊரத்தி செந்தமிழ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கழக அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வண்ணவேல் விளையாட்டுக்கழகச் செயலாளர் ஆர்.ராஜ்குமார் கேட்டுள்ளார். (த-49)

## விபரம் சேகரிப்பு

(பொன்னாலை)

வடக்கு- கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் இரண்டாம் மொழியாகச் சிங்களத்தை தமிழ் மாணவர்களுக்குப் போதித்து வருபவர்களையும் தமிழை சிங்கள மாணவர்களுக்குப் போதித்து வருபவர்களையும் நிரந்தர ஆசிரியர் ஆளணிக்குள் உள்வாங்குவதற்கான விபரங்களை மாகாணக் கல்வித் திணைக்களம சேகரித்து வருகின்றது.

மேற்கண்டவாறு இரண்டாம் மொழியைப் போதித்துவரும் ஆசிரியர்கள் தமது விபரங்களைத் தத்தம் பாடசாலை அதிபர்கள் மூலமாக அந்தந்த வலயங்களைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-49)

## இலங்கை போக்குவரத்து சபையினால் சாரதி, நடத்துநர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சாலைகளுக்கு சாரதிகள் மற்றும் நடத்துநர்களை ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சாரதிகளுக்கு விண்ணப்பிப்போர் ஆகக குறைந்தது எட்டாம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேணடும். அத்துடன் 23-45 வயதிற்கு உட்பட்டவராகவும உயரம் 5அடி 3 அங்குலமும் கொண்டவராகவும் 100 இறாத்தல் நிறையுடையவராகவும் செல்லுபடியாகக் கூடிய பார வாகன சாரதி செலுத்தல் அனுமதிப் பத்திரத்துடன் ஆகக்குறைநதது 2 ஆண்டுகள் பார வாகன செலுத்தலில் அனுபவமும் இருத்தல்வேண்டும்.

நடத்துநருக்கான ஆகக்குறைந்த தகைமைகளாக கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் இருதடைவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம்/ எண்கணிதம், மொழி உட்பட மொத்தம் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருதல் வேண்டும்.

அத்துடன் இவ்விண்ணப்பதாரர் 18-45 வயதிற்குட்பட்டவராகவும் 5அடி உயரத்தைக் கொண்டவராகவும இருத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட தகைமை உடையவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் இம்மாதம 30 ஆம் திகதிக்கு முன்னர் 'ஆளணி முகாமையாளர், இலங்கைப் போக்குவரத்துச்சபை, இல.200, கிருலவீதி, கொழும்பு-05' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கபபட வேண்டும்.

இதேவேளை, இவ்விண்ணபத்துடன் இருப்பிடத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு பிரதேச செயலாளரினால் கீழொப்பமிடப்பட்ட கிராம அலுவரின் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (ற-7)

## யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சந்திரசிறி பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இராணுவத்தளபதியாக நியமனம் பெற்ற மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அண்மையில் சிறிய இராணுவ நிகழ்ச்சியுடன் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.










இந்தியாவில் தேசிய பாதுகாப்புப் பயிற்சியை நிறைவுசெய்து திரும்பிய 24 மணிநேரத்தில் இப்பதவிக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

யாழ்ஸ்ரீ கனகவிகாராதிபதி வணக்கத்துகுரிய மீகாஹயக்துர ஞானரத்னநாயக தேரர், வண.தெல்தோட்ட சந்தாநந்த தேரர், வண. கதுருடுவ சுகதவன்ச தேரர் தலைமையில் மகா சங்கத்தினா 'பிரித்' ஓதி புதிய தளபதியை ஆசீர்வதித்தனர்.

சம்பிரதாயபூர்வமாக பதவி ஏற்ற சந்திரசிறி தனது பதவிக்குரிய முதல் அரச ஆவணத்தில் கையொப்பமிட்டார்.

அதன்பின் இராணுவ மரியாதையை ஏற்றுககொண்ட மேஜர் ஜெனரல் சந்திரசிறி சமாதான உடன்படிக்கையின பேறான சமாதான சூழலை பேணுவதன் முக்கியத்துவத்தை அங்கே திரண்டிருந்த இராணுவத்தினருக்கும் யாழ்.குடாநாட்டில் சேவையாற்றும் அதிகாரிகளுக்கும் எடுத்துரைத்தார்.

இவ்வைபவத்தின் நினைவாக யாழ்.நாக விகாரைக்கு ஒரு கணனியை வழங்கினார். இறுதியாக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி அங்குள்ள உள்ளக நோயாளர்களையும் சந்தித்து அளவளாவினார். (ற-அ)







யாழ்.குடாநாட்டில் தொடர்ச்சயாக இடம் பெற்றுவரும் இராணுவ அராஜகங்களைக் கண்டித்து இரண்டாவது நாளாகவும் கிளிநொச்சியில் நேற்றுக் காலை பேரணி நடத்தப்பட்டது. இப்பேரணியிலிருந்து.....

## மாலை நேரச் சந்தையால் போக்குவரத்திற்கு இடையூறு

(பொன்னாலை)

யாழ்.மானிப்பாய் வீதி- ஆனைக்கோட்டைச் சந்திப் பகுதியில் மாலை நேரங்களில் கூடும் சந்தையால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சந்திப் பகுதியில் நீண்டகாலமாக கூடிவரும் சந்தை குறித்து எவரும் இதுவரை நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு நேரங்களில் எவ்விதமான மின் விளக்குகளும் இல்லாதிருக்கும் இச்சந்திப் பகுதியூடான போக்குவரத்துக்கள் மேலும் சிரமத்தின் மததியிலேயே இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொது இடம் ஒன்றைத் தெரிவுசெய்து அதில சந்தை வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து வீதிப் போக்குவரத்துக்கு தடையாக இருந்துவரும் இச்செயற்பாட்டை நீக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (த-49)

# முப்பது வயதுக்கு மேல் கருத்தரிக்கலாமா?

## டாக்டர்கள் வெளியிடும் அதிர்ச்சித் தகவல்கள்

**30 வயதுக்கு மேல் திருமணம் செய்யும் பெண்களில் மூன்றில் ஒருவர் குழந்தைப் பேறு இல்லாதவராக இருக்கிறார்.**

உலகம் முழுவதிலும் எடுக்கப்பட்ட மருத்துவ முடிவுகள் சில, மக்களைத் திடுக்கிட வைப்பனவாக உள்ளன.


30 வயதுக்கு மேல் திருமணம் செய்யும் பெண்களில் மூன்றில் ஒருவர் குழந்தைப் பேறு இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. அப்படியே பிறந்தாலும் பிறக்கிற குழந்தைகள் பல்வேறு உடல் ஊன, மன ஊனக் குறைபாடுகள் உள்ளனவாக இருக்கின்றன என்பது ஆராய்ச்சி முடிவு.

அதிர்ச்சி அலைகளை உருவாக்கிய இந்தப் புள்ளி விபரங்கள் தொடர்பாக 'ஆகாஷ் கருவாக்க மையத்தின்' இயக்குநர் டாக்டர் டி.காமராஜ் பின்வருமாறு கூறுகிறார்.

ஒரு பெண் பூப்பெய்திய பிறகு 13 வயது முதல் 45 வயதுரை கருத்தரிக்கும் வாய்ப்பு உண்டு. 30 வயதை நடுத்தர வயதாகவே பெண்கள் கருதுகிறார்கள். அது தவறு. கருத்தரிக்கச் சரியான வயது 20 முதல் 25 வரைதான். அதிக பட்சமாக 30 வயது வரையும் கருத்தரிக்கலாம். 30 வயதைக் கடந்த பிறகு பெண்கள் கருத்தரித்தால் அவர்களுடைய கருவுறுப்புக்களின் திறன் குறையும். இதனால் பிறக்கிற குழந்தைகளுக்குப் பாதிப்பு ஏற்படும்.

30 வயதுக்கு மேல் ஒரு பெண் கருத்தரித்தால் அப் பெண்ணின் கருமுட்டையின் தரம் குறைந்துவிடும். என்று மருத்துவ ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. 20 வயது இளம் பெண்ணுக்கு இருக்கிற கருத்தரிக்கும் தன்மை 30 வயதுப் பெண்ணுக்கு இருக்கமுடியாது. 20 வயது முதல் 25 வயது வரையான பெண்ணின் கருமுட்டை ஆரோக்கியமாக இருக்கும்.

அந்தக் காலகட்டத்தில் பெண் கருவுற்றால் அந்தக் குழந்தை ஆரோக்கியமாகவும் நோய் எதிர்ப்புச் சக்தி கொண்டதாகவும் இருக்கும்.



வளைந்தபடி பிறந்த குழந்தை

30 வயதைத் தாண்டிய பெண் கருவுறும் போது உடல் ரீதியாகப் பல்வேறு வகையான பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிவரும்.

30 வயதைக் கடந்த பெரும்பாலான பெண்கள் வயதானால் என்ன? குழந்தை பெற்றுக்கொள்ளலாம் என நினைப்பதற்கு முக்கிய காரணம் நவீன மருத்துவ முறைகள் தாம். சோதனைக் குழாய் முறைகளில் வயதான நிலையில் ஹார்மோன் குறைபாடுகள் இருந்தாலும் அதனைச் சரி செய்து கருப்பையின் திறனை அதிகரித்துக் குழந்தை பெறும் வாய்ப்புக்கள் உள. அதே சமயம் சோதனைக் குழாய் சிகிச்சைக்குப் பொருத்தமானவர் எனச் சிலரைத் தேர்வு செய்தாலும் அது சில சமயங்களில் தோல்வியை அடைகின்றன.

டாக்டர் காமராஜ் மேலும் கூறுகிறார்: வயது ஆக ஆக பெண்ணின் உடலிலுள்ள ஆற்றல், கருவுறுப்புகளின் சக்தி ஆகியவை படிப்படியாகக் குறையும். இதனால் கருத்தரிக்கும் வாய்ப்புக் கனவாகவே மாறிவிடும். 30 வயதைக் கடந்த பெண்கள் உடலில் ஹார்மோன் மாற்றங்கள், உயர் இரத்த அழுத்தம், கருப்பையில் கழலைகள், சினைப் பையின் செயல்திறன் குறைதல், நோய் எதிர்ப்புச் சக்தி குறைவு, உடல் பருமன், இரத்தச்சோகை போன்ற பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

30 வயதைக் கடந்த பெண்களுக்குத்தான் அதிகளவில் கருச்சிதைவுகள் ஏற்படுகின்றன. கருப்பையில் நார்த்திகக் கழலைகள் எனப்படும் 'பைப்ராய்டுகள்' நீர்க் கழலைகள் போன்றன அதிகரித்துக் கருத்தரிக்கும் வாய்ப்பைக் குறைக்கின்றன. கருப்பையின் உள்வரிச் சவ்வு இயல்புக்கு மாறாக வளர்ச்சியடைந்தோ, வளர்ச்சி குறைந்தோ அதன் உள்வரிகள் திறன் இழந்தோ காணப்படும். இதனால் கருவுயிர்களைக் காப்பாற்ற இயலாமல் போகிறது.

தாய்மையை விரும்பும் பெண்கள் அதற்காகத் திட்டமிட சரியான வயது, தாய்மையை முழுமையாக அனுபவிக்கச் சிறந்த வயது 20 முதல் 30 வரை என்று அடித்துக் கூறுகிறார் டாக்டர் காமராஜ்.

30 வயது முதல் 35 வய்துக்கிடையில் கருத்தரிக்கும் வாய்ப்பு அதற்கு முன்பாகக் கருத்தரிப்பதில் இருக்கும் வாய்ப்பை விட இரு மடங்கு தள்ளிப் போகிறது. குழந்தைப் பேற்றுக்கும் பெண்ணின் வயதுக்கும் இடையில் உள்ள தொடர்பைப் பற்றி பல ஆண்டுகளுக்கு முன்பே ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டு கருத்தரிக்கும் வாய்ப்புக்காப் பல்வேறு நிலைகளைப் பற்றி ஆராய்ந்தனர். இதில் 20 வயது முதல் 25 வயது வரைதான் குழந்தைகளைப் பெற ஏற்ற காலம் எனக் கண்டறிந்து அறிவித்துள்ளனர்.

உடலில் மற்றைய உறுப்புகளை விட இனப்பெருக்க உறுப்புகள் வேகமாக முதிர்ச்சியடைந்து விடுகின்றன. பெண்ணின் நடுத்தர வயதிலேயே மாதவிலக்கு முற்றுப் பெறுதல் வந்து கருத்தரிப்பதற்கான வாய்ப்புக்கு முற்றுப் புள்ளியையே வைத்து விடுகிறது.

நாகரீக வளர்ச்சி கூடவே நமக்குப் புதிய வியாதிகளையும் வழங்கியிருக்கிறது. ஒரு பெண் 30 வயதைக் கடக்கும் போது இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற வியாதிகளும் தொற்றிக் கொள்கின்றன. அந்த வயதில் அப்பெண் கருவைச் சுமக்கும் போது அந்தக் குழந்தைக்கும் அந்த மாதிரியான வியாதிகள் வர வாய்ப்பு இருக்கின்றன. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தாத ஒரு பெண் கருவுற்றிருந்தால் அந்தப் பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தையின் அளவு பெரிதாக அதாவது 4 கிலோ எடைக்கு மேல் இருக்கும். அதே மாதிரி தைராய்ட் பிரச்சினை உள்ள பெண் கருவுற்றால் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிவரும். குறிப்பாக மூளை வளர்ச்சியற்ற குழந்தைகள் பிறக்கும் என்ற ஆய்வுகள் திடுக்கிட வைக்கின்றன.

**கருப்பை – சிறு குறிப்பு:**

பெண்ணின் கருப்பை தசை நார்களானது. இதன் மேற் பகுதி அகலமாகவும் கீழ்ப் பகுதி குறுக்கலாகவும் இருக்கும். கருப்பையின் மொத்த நீளம் 7.8 செ.மீ. அகலம் 5.6 செ.மீ. பருமன் 3.4 செ.மீ. குழந்தை இந்தப் பையில் பதியமாகி வளரும் போது இதுவும் பெரிதாகும். குழந்தை பிறக்கும்போது கருப்பைத் தசைகள் சுருங்கிக் கொடுப்பதால் வலி உண்டாகி குழந்தையையும் வெளியேற்றும். இளம் வயதில் அதாவது. 20 முதல் 25 வயது வரை பெண்களுக்குக் கருப்பையின் தசை நார்கள் உறுதியாக இருக்கும்.



இன்னும் குறிப்பிட்டுச் சொல்வதானால் முதிர் வயதுப் பெண்கள் பிரசவிக்கும் போது இடுப்புப் பகுதியில் உள்ள எலும்புகளின் விரிந்து கொடுக்கும் தன்மை வெகுவாகக் குறைந்திருப்பதால் சுகப் பிரசவம் நடப்பது அரிதாகிறது. இதனால் சிசேரியன் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. மருத்துவ வசதியில்லாத இடங்களில் வசிக்கும் பெண்கள் இறப்பதற்கு இதுவும் முக்கிய காரணமாகும்.



**30 வயததைக் கடந்த பெரும்பாலான பெண்கள் வயதானால் என்ன? குழந்தை பெற்றுக்கொள்ளலாம் என நினைப்பதற்கு முக்கிய காரணம் நவீன மருத்துவ முறைகள் தாம். சோதனைக் குழாய் முறைகளில் வயதான நிலையில் ஹார்மோன் குறைபாடுகள் இருந்தாலும் அதனைச் சரி செய்து கருப்பையின் திறனை அதிகரித்துக் குழந்தை பெறும் வாய்ப்புக்கள் உள. அதே சமயம் சோதனைக் குழாய் சிகிச்சைக்குப் பொருத்தமானவர் எனச் சிலரைத் தேர்வு செய்தாலும் அவை சில சமயங்களில் தோல்வியை அடைகின்றன.**


இப்படியாகப் பல்வேறு பின்னடைவுகளை 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சந்திக்க நேரிடுகிறது.

30 வயதுக்கு மேல் குழந்தைப் பிறப்ப என்பது கூடாத காரியமோ முடியாத விஷயமோ அல்ல என்கிறார் ராமச்சந்திரா. மருத்துவக் கல்லூரியின் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவத்துறைப் பேராசிரியர் டாக்டர்.ஜி.இசக்கியம்மாள்.

30 வயதுக்கு மேல் போகப் போக பெண்ணின் கருமுட்டை முதிர்ச்சியடைந்து விடுகிறது. அப்போது கருவுறும் பட்சத்தில் மியூடேஷன் எனப்படும் மரபணு மாற்றம் அல்லது மரபணுப் பிறழ்வு ஏற்பட வாய்ப்புள்ளது. அப்போது ஏற்படும் ஹார்மோன் மாற்றத்தால் குறையுள்ள குழந்தைகள் பிறக்கக்கூடும்.

**இரட்டைத் தலைக் குழந்தை**

30 வயதுக்கு மேல் கருவுற்றுப் பிறக்கும் குழந்தை மனநலம் குன்றியதாகப் பிறக்கலாம். குழந்தையின் நெற்றியில் விரல் முளைத்திருக்கலாம். நெஞ்சுக்கு வெளியே இதயம் துடித்துக் கொண்டிருக்கலாம். காது கேட்காமல் இருக்கலாம். இரட்டைத் தலையுடன் இருக்கலாம். முதுகுகூன் விழுந்தது மாதிரி இருக்கலாம். இப்படிப் பல விநோதமான பிறப்புக்கள் நிகழலாம் என்கிறது விஞ்ஞானம்.



இந்த மரபணு மாற்றங்கள் எதனால் ஏற்படுகின்றன?

"தலைமுறை தலைமுறையாகச் சொந்தத்துக்குள்ளேயே திருமணம் செய்து கொண்டிருந்தாலோ, கருவுறுதலின் போதும், கரு தாங்கும் போதும் தாயின் மனநிலை ஆரோக்கியமாக இல்லை என்றாலோ இப்படி ஏற்பட வாய்ப்பு உள்ளது" என்கிறார் டாக்டர் இசக்கியம்மாள்.

மனதில் ஏற்படும் மாற்றம் குரோமோசோம்களிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன என்று சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

20 முதல் 24 வயதில் திருமணம் செய்து கொண்டு குழந்தை பெற்றெடுக்கும் பெண்களுக்கு 1500 இல் ஒரு குழந்தை தான் குறையுள்ளதாகப் பிறக்க வாய்ப்பு உள்ளது. 30 முதல் 34 வயதில் பிரசவிக்கும் பெண்களுக்கு 800 இல் 1 குழந்தை குறையுள்ளதாகப் பிறக்குமாம்.

35 முதல் 39 வய தில் 230 குழந்தைகளில் ஒரு குழந்தை குறை யுள்ளதாகப் பிறக்க வாய்ப்பு உண்டு. 40 முதல் 44 வரையான வயதா? நூறில் ஒரு குழந்தை ஊனமாக இருக்கும் 45 வயதுக்கு மேலான பெண்களுக்குப் பிறக்கும் குழுந்தைகளில் 50 இல் ஒரு குழந்தை குறைபாட்டோடு பிறக்கும் என்கிறது அந்த விகிதாசாரப் புள்ளி விபரம்.



அன்னப்பிளவு

பொதுவாக 35 வயதுக்கு மேல் கருவுறும் பெண்களின் சிசுவை 'அல்ட்ராஸ்கேன் செய்து பார்த்தால் சிசுவின் கழுத்துப்பட்டை தடித்திருந்தாலோ மூக்குப் பாலம் பள்ளமாக இருந்தாலோ இனக் கீற்று குரோமோ சோமின்னை ஆய்வு செய்தால் டவுன் சின்ட்ரோம் எனப்படும் இந்தக் கோளாறு அதில் தெரிந்துவிடும். உடனே இதைச் சம்பந்தப்பட்ட தம்பதியரின் கவனத்துக்குக் கொண்டுவந்து கருவைக் கலைத்து விடுவோம் என்கிறார் டாக்டர் கமலா செல்வராஜ்

### 30க்கு மேல் கருத்தரித்தால்

*பிரசவத்தின் போது ஆபத்து வருமோ எனும் பயத்தை முதலில் விட்டுவிட வேண்டும். பயப்பட்டால் பிறப்பு வாயிலின் தசை நார்கள் சுருங்கிப் பிரசவத்தைக் கடினமாக்கிப் விடும்.

*பேரீச்சம்பழம் அதிகமாகச் சாப்பிட வேண்டும். அது கருப்பைத் தசைகளை வலுவாக்கும்.

*பால் சாப்பிடுவது நல்லது. காப்பி கலக்கக்கூடாது. அது பாலில் உள்ள கல்சியத்தைத் திருடிக் கொண்டு தாய்க்குப் போய்ச் சேராமல் தடுத்துவிடும்.

உலகில் இன்று உள்ள உடல் ஊனமுற்றவர்கள், பிறவிக் குறைபாடு உள்ளவர்கள், மற்றும் மன வளர்ச்சி குன்றியவர்கள் ஆகியோர் தங்களது பெற்றோரின் அலர்ச்சியப் போக்காலும் அறியாமையினாலுமே இந்த நிலைக்கு ஆளாகியிருக்கி றார்கள் என்பது வேதனைக்குரிய விஷயம்.

**குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள்:**




*இரத்த அழுத்தம்.
*சர்க்கரை நோய்
*மூளை வளர்ச்சிக்குறைபாடு
*மரபணுப் பிறழ்வு
*நோய் எதிர்ப்புத் திறன் குறைவு
*இதயக் கோளாறுகள்

'பருவத்தே பயிர் செய்' என்ற பழமொழி இளம் பெண்களுக்கு மிகப் பொருத்தமானது.

தாய்மை, பெண்மைக்கு அர்த்தத்தையும் அடையாளத்தையும் அளிக்கிறது. அந்த அந்தஸ்தை உரிய காலத்திலேயே அடைவதுதான் சிறந்தது. இதை இன்றைய இளம் பெண்களிடம் எடுத்துரைக்கும் மாபெரும் பொறுப்பு அவர்களுடைய பெற்றோருடையதாகும்.

நன்றி:குங்குமம்

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு



76

## C.T.முதலியார்

ஒரு சமயம் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் என்னுடைய விரிவுரை நடந்தது. நுழைவுக் கட்டணம் 10 ரூபாய. அன்று வள்ளலாரைப் பற்றி விரிவுரை செய்தேன். சென்னையில் அரசு தலைமைச் செயலகத்தில் உதவிச் செயலாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்த திரு C.T. முதலியார் அவர்களும், அவர் மனைவி யசோதா அம்மையாரும் நுழைவுக் கட்டணம் தந்து என்னுடைய விரிவுரையைச் செவிமடுத்துக் கொண்டிருந்தார்கள். ஜீவகாருண்யத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது என் கண்களில் நீர் பெருகியது. அந்த உருக்கமான பேச்சைக் கேட்ட C.T. முதலியார் தன் மனைவியைப் பார்த்து "இந்த விரிவுரையைக்கேட்ட நாம் புலால் உண்ணலாமா? ஆதலால் இந்த நிமிஷம் முதல் புலால் உண்ணாது சைவத்தைக் கடைப் பிடிக்கவேண்டும்'' என்றுகூறி இருவரும் சைவத்தைக் கடைப்பிடித்தார்கள். விரிவுரை மண்டபத்திற்குள் நுழையும் பொழுது அசைவர்கள். மீண்டும் போகும் பொழுது சைவர்கள். இதனை அவரே என்னிடம் கூறினார்.

இவ்வாறு எனது விரிவுரையைக் கேட்டு சைவத்தைக் கடைப்பிடித்தவர்கள் பல்லாயிரவர்.

ஒரு ஊரில் நான் கூறிய பட்டினத்தார் விரிவுரையைக் கேட்டு, தாயாருடன் பிணங்கிப் பேசாதிருந்த ஒருவர், வீட்டிற்குப் போனவுடன் தாயாரை வணங்கி அவருடைய ஆசியைப் பெற்றார். இவ்வாறு பலர் திருந்துவதனால் எனக்கு மேலும் விரிவுரை செய்ய எழுச்சி உண்டாகின்றது.

### தாயாரின் மகாசமாதி

என்னுடைய தாயார் கனகவல்லி அம்மையார் உத்தம குணங்களின் உறைவிடம். ஏழைகளுக்கு இரங்கும் கருணைக்கடல். நான் காங்கேயநல்லூர் சென்றவுடன் தாயாரை வீழ்ந்து வணங்குவேன். அவர் என் நெற்றியில் திருநீறு இட்டு "நோயின்றி வாழ்" என்று கூறி ஆசீர்வதிப்பார்.

என்னிடம் பலருக்கு உதவி செய்யுமாறு பணித்தருள்வார். என்பால் 200,300 என்று பணதைப் பெற்றுக்கொண்டு அவரை நாடி வரும் ஏழை எளியோருக்கு 20,30 என்று, கொடுத்து உதவுவார். அவருக்குச் சகல கலைகளும் தெரியும். யாரிடத்திலும் எப்பொழுதும் கோபிக்கத் தெரியாது''

1977 நவராத்திரியின் பொழுது நாகப்பட்டினத்தில் குமாரர் கோயில் திருப்பணிக்காக விரிவுரை செய்துகொண்டிருந்தேன். இரும்புக்கண்ட முனிசாமி செட்டியார் தாயினும சாலப்பரிந்து ஆவன செய்து உபசரித்தார்.

குடியாத்தம் பெருந தனவந்தரும், பஸ் அதிபரும், கொடை வள்ளலுமாகிய மாண்பு மிகு ஸ்ரீஹரி நாயுடு M.A.அவர்கள் விஜயதசமியன்று குடியாத்தத்தில் ஆஸ்திக சமாஜம தொடக்க விழாவிற்கு என்னை வற்புறுத்தி அழைத்தார். அவருடைய 'பென்ஸ்' என்ற காரை நாகப்பட்டினத்திற்கு அனுப்பினார். விரிவுரை முடிந்தவுடன் அந்தக் காரில் புறப்பட்டு விடியற்காலை 5 மணிக்குக் காங்கேயநல்லூர் சென்றேன். தாயாரை வணங்கினேன். "என்ன வேலையாக வந்தாய்''என்று கேட்டார்."அம்மா! குடியாத்தத்தில் விரிவுரை. அதற்குச் சென்று கொண்டிருக்கிறேன்'' என்றேன். "சரி போய்வா!'' என்றார்கள். குடியாத்தம் போய் ஆஸ்திக சமாஜத்தைத் தொடங்கி வைத்து, விரிவுரை செய்துவிட்டு நண்பகல் ஒரு மணிக்குப் புறப்பட்டு மாலை நாகப்பட்டினம் சென்று விரிவுரை செய்தேன்.

இரண்டு நாளைக்குப் பின் காங்கேயநல்லூரில் தாயார், (தம்பி சச்சிதானந்தன் வீட்டில் தங்கியிருந்தார்) தம்பியை அழைத்து "நாளை இரவு 3மணிக்கு என் ஆத்மா சாந்திஅடையும்.அண்ணாவுக்குத் தெரிவித்துவிடு!'' என்று கூறினாராம். என்னுடைய கடைசித்தம்பி திருப்புகழ் மணியிடம் என் தாயாருக்கு அளவுகடந்த பாசம், அவன் ஜோதிட்த்தில் வல்லவன். ஜோதிட நூல்படி அம்மாவுக்கு இப்பொழுது முடிவில்லை என்று கூறினானாம். அம்மாவுக்கு 7 புதல்வர்கள். இரு புதல்வர்கள் மறைந்துவிட்டார்கள். இப்பொழுது 5 புதல்வர்கள் இருக்கின்றார்கள். நான் நாகையில் இருந்தேன். இரு தம்பிகள் மயூரநாதன். திருமாமணாளன் சென்னையில் இருந்தார்கள். மற்றொரு தம்பி திருப்புகழ்மணி தனது வீட்டில் இருந்தான்.

27.10.77அன்று தம்பி சச்சிதானந்தன் மேல்மாடியில் படுக்கிறவன்.தாயார் அருகில் படுத்துக்கொண்டான். இரவு 1மணிக்குத் தாயார் தம்பியை எழுப்பி "என்னுடைய இறுதிநேரம் வந்துவிட்டது.எல்லோருக்கும் சொல்லி அனுப்பு'' என்றார்களாம். இரவு 2.30மணிக்குத் தம்பியைத் "தலைவலி மருத்தீடு'' என்ற திருப்புகழைப் பாடச் சொன்னார்கள். தான் "இருவர் மயலோ''என்ற திருப்புகழைப் பாடிக்கொண்டே மரண வேதனையின்றி இளம்பூரணன் இணையடி சேர்ந்துவிட்டார்.

விடியற்காலை 3மணிக்கு நாகைக்குத் தாயாருடைய முடிவைப் பற்றி தொலைபேசி மூலம் தெரிவித்தார்கள். நான் உடனே நீராடி முருகனை வழிபாடு செய்துவிட்டு, அன்பர் திரு K. முனிசாமி செட்டியாருடன் காரில் விரைந்து பிரயாணம் செய்து நண்பகல் காங்கேயநல்லூரை அடைந்தேன்.

தாயார் சமாதியில் இருப்பதுபோல் கண்மூடி அமர்ந்திருந்தார். அவர் 99 ஆண்டுகள நிலவுலகில் வாழ்ந்தவர்.எனினும், தாயாருடைய பிரிவு மிகுந்த வேதனையைத் தந்தது.

1950இல் தந்தையார் முருகனடி சேர்ந்தார். அவர் இருக்கும் பொழுதே சமாதிக் கோயில் கட்டியிருந்தேன். தந்தையாருடைய திருவுடல் அடக்கம் செய்த இடத்தில் பாணலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அப்பொழுதே லிங்கத்துக்கு எதிரில் நந்தியாக அம்மாவை அடக்கம் செய்ய எண்ணி நந்தியின் கீழே சமாதியறை கட்டி ஏற்பாடு செய்திருந்தேன்.

மின் விளக்குகளால் அலங்கரித்த மலர் விமானத்தில் தாயாருடைய திருமேனியை எழுந்தருளச் செய்து நந்தியின் கீழே அவரது திருமேனி அடக்கம் செய்யப்பெற்றது. பத்து நாட்கள் சமாதி பூசை செய்து 7.11.77 திங்கட்கிழமை முத்தி விளக்கு வீடுபேறு வழிபாடு நடைபெற்றது. தாயார் மறைந்த நாள் ஐப்பசி மாதம் அன்னாபிஷேக தினமாகிய அச்வினி நட்சத்திரம்.எங்கள் மரபில் மறைந்த திதியைக் கொண்டாடுவதில்லை. நட்சத்திரத்தைத்தான் நினைவு நாளாகக் கொண்டாடுவது வழக்கம். (தொடரும்)

---

சுனாமியால் உயிரிழந்தோருக்காக

# திங்கட்கிழமை காலை 9.24ற்கு நாடு முழுவதும் மௌன அஞ்சலி!

(கொழும்பு)

கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமிப பேரழிவினால் 35 ஆயிரம் மனித உயிர்கள் பலியாகியதை நினைவு கூரும் விதத்தில் நாடு முழுவதும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.24ற்கு இரு நிமிடங்கள் மௌனம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாடு முழுவதிலும் வீதிகளில் ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்கள் இந்நேரத்தில் பொலிஸாரால் நிறுத்தப்படும். ஆலயங்களில் மணிகள அடிக்கப்படும். அரச,தனியார் நிறுவனங்களில் ஊழியர்கள் இரு நிமிடங்களுக்கு பணிகளை நிறுத்திக்கொள்வர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவில ஊடக அமைச்சின செயலாளர் கணேகல இதனைத் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பரலெய என்னுமிடத்தில் பிரதான வைபவம் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்க்கடசித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்குபற்றுவர் என கணேகல தெரிவிததார். இது தொடர்பில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார். (ற-6)

# தொடரும் பொலிஸ் சோதனை நடவடிக்கைகள்

(கொழும்பு)

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் பொலிஸ் பிரிவின் செயலாளர் தெரிவித்தார்.

நாடடில் அதிகரித்து வரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தவும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைதுசெய்யும் நோக்கிலும இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டார். இந்த சோதனை நடவடிக்கைகள் பல மட்டங்களில் மேற்கொள்ளபபடுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (து-7)

# ஜெயந்தி தினவிழா

(கொக்குவில்)

தாவடி ஸ்ரீராம கிருஷ்ண சேவாச்சிரமம் தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியாரின் 153ஆவது ஜெயந்தி விழாவை இன்று பிற்பகல் 4மணிக்கு தாவடி இ.த.க பாடசாலையின் பழைய கட்டடத்தில் சேவாச்சிரம உறுப்பினரும், வலிகாம கல்வி வலய சங்கீத ஆசிரிய ஆலோசகரும் சேவாச்சிரம உறுப்பினருமான விமலாதேவி நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக, முன்னாள் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரும்,தற்போதைய தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியுமான வைத்திய கலாநிதி நவமலர் கனகரட்ணம் கலந்துகொள்வார்.தாவடி,அம்பலவாண வேதநாயகர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ கு.பரமசிவக் குருக்கள் ஆசியுரையை வழங்குவார். (த-7)

# கிராமிய புத்தெழுச்சித் திட்டத்தின் கீழ் 15000 கிராமங்களில் விவசாய அபிவிருத்தி

(கொழும்பு)

கிராமியப் புத்தெழுச்சித் தடடத்தின் கீழ் 15ஆயிரம் கிராமங்களில் விவசாய உற்பத்திகளை மேம்படுத்தப் போவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

'மஹிந்தவின் சிந்தனைகள்' என்ற கொள்கைப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளவாறு மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சின் செயலாளர் திஸஸ வர்ணசூரிய தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வலயத்திற்கும் பொருத்தமான பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள மேற்கொள்ளப்படுவதாகவும் வர்ணசூரிய குறிப்பிட்டார்.

நுகர்வோர் சமாளிக்கக் கூடிய விலைகளில் விவசாய உற்பத்திகளை விநியோகிக்கக் கூடிய சந்தையை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதியின் வரவு-செலவுத் திட்டத்தில் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

எதிர்காலத்தில் உரத்தின் விலை குறையவிருப்பதால் விவசாய உற்பத்திகளுக்கான செலவினங்கள் மேலும் குறையக் கூடும். இதனால் உற்பத்திகளின் விலை மேலும் வீழ்ச்சி அடையலாம் என விவசாய அமைச்சின் செயலாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ற-7)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆனந்தா வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்க மத்திய குழு அறிமுக வைபவமும் பாடசாலையின் அபிவிருத்தி மற்றும் செயற்திட்ட கலந்துரையாடலும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் ஆனந்தா வித்தியாசாலையில் மத்தியகுழு பொதுச் செயலாளர் ம.வித்தியானந்தநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புரையை மத்தியகுழு உறுப்பினரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி மீரா அருள்நேசன் நிகழ்த்தவுள்ளார். (ற-9)

## கிறிஸ்துமஸ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 25ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00மணிக்கு கிறிஸ்துமஸ் விழா நடைபெறவுள்ளது.

இதில் கிறிஸ்துமஸ் கீதங்கள், நத்தார் பாப்பா வருகை, அருட்தந்தை இராசநாயகம் அடிகளாரின் சொற்பொழிவு என்பன இடம் பெறவுள்ளன. (ற-9)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முருக அடியார்கள் வழங்கும் முருகநாம பஜனை இடம்பெறவுள்ளது. (த-35)

## ரணில் இன்று சிங்கப்பூர் பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று வெள்ளிக்கிழமை தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு சிங்கப்பூருக்குச் செல்லவுள்ளார்.

சிங்கப்பூர் செல்லும் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 2ஆம் திகதி நாடு திரும்புவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 79

### படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



இளம் கதாநாயகர்களிடையே 'காதல் மன்னனாகத்' திகழும் இவர் நீண்ட இடைவெளிக்குப் பின் புதிய படங்களுடன் களமிறங்கத் தயாராகிக் கொண்டிருக்கிறார். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 79**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் -வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக்கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-79


படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-..............................

அனுப்புபவரின் முகவரி :-..............................

..............................

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 77
சரியான விடை





நடிகை நமீதா

**இவரைத் தெரியுமா பரிசுப்போடடி இல. 77இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | லோ.அபிராமி<br>வன்னிச்சியம்மன் கோயிலடி,<br>வல்வெட்டி. |
| இரண்டாம் பரிசு | :- | L.சுலக்சனா<br>வண்ணார்பண்ணை,<br>யாழ்ப்பாணம். |
| மூன்றாம் பரிசு | :- | த.அரவிந்தன்<br>M.S. லேன்,<br>கோண்டாவில். |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்:**

மா.நாகதுஷ்யந்தினி, யாழ்ப்பாணம். ந.அனாலிதா, வல்வெட்டி. ஏ.கபீர்த்தன், அரியாலை. நா.கபிலகுமார், யாழ்ப்பாணம். கி.கனகசபாபதி, தம்பசிட்டி. ம.மைதிலி, கோண்டாவில். செ.பிறேம்நாத், யாழ்ப்பாணம். வே.குமாரசுவாமி, கரவெட்டி. வ.சிவாஜி, கரணவாய் கிழக்கு. சி.மேனகா, யாழ்ப்பாணம். யோ.சிவாஜினி, சாவகச்சேரி. பா.செல்வராணி, வட்டுக்கோட்டை. கே.கலைச்செல்வி, கைதடி. சி.சங்கீதா+ சம்பூரணி, வட்டுக்கோட்டை. து.நக்கீரன், மல்லாகம்.

## உயரமான கட்டடத்துக்கு ஆபத்து?

தைவான் நாட்டின் மக்கள் தொகை கிட்டத்தட்ட 70 இலட்சம். ஆனால் இங்கு வாழும் பெரும்பான்மையான மக்கள் கிராமத்தில் வாழ்வதைவிட நகரத்தையே விரும்புகின்றனர். இதனால் நகர்ப் புறங்களில் சன நெருக்கடி அதிகம் உள்ளது. இது மட்டுமல்லாது நகரங்களில் மக்கள் தொகை அதிகமாவதால் வீடுகளுக்கும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இதனால் அடுக்கு மாடி கட்டடங்கள் அதிகம் கட்டப்படுகின்றன.

இந்த நிலையில் தைவான் நாட்டில் உலகிலேயே உயரமான கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இதன் உயரம் 1667 அடி. இந்தக் கட்டடத்தில் 101 மாடிகள் உள்ளன. ஆனால் இந்தக் கட்டடத்தால் தைவானுக்குப் புகழ் கிடைத்தாலும் புவியியல் ஆராய்ச்சியாளர்கள் "கட்டடத்தின் ஆயுள் காலம் வெகு காலம் நீடிப்பது கடினம்தான்." என்றுக் கூறி உள்ளனர்.


இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தைவான் நாடு அடிக்கடி பூகம்பத்திற்கு உள்ளாகும் பகுதி. உயரமான கட்டடங்கள் பூகம்பத்தினால் பாதிக்கப்படும் போது ஏராளமான பொருள் சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்படும் என்று அந்நாட்டு அரசுக்கு அறிவுறுத்தியும் உள்ளனர்.

எது எப்படியோ உலகின் உயரமான கட்டடம் பூகம்பத்தால் பாதிக்கப்படாமல் இருந்தால் சரிதான்.

## ஊனம் ஒரு குறையில்லை

**சோ**தனைகளை எதிர்கொள்வதில்தான் மனித சக்தி வெளிப்படுகிறது. உடலில் ஊனம் இருந்தாலும் மனதில் உறுதி இருக்குமானால் எதையும் சாதிக்க முடியும். உறுதியான எண்ணமே உயர்வான வாழ்வைத் தரும்.

தனக்குக் கண்பார்வை சரியாகத் தெரியவில்லை. காது சரியாகக் கேட்கவில்லை என்று வருந்திக் கொண்டு இருப்போம் எனில் அதனால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. ஊனமுற்ற பலரும் தன்னுடைய குறையைப் பெரிதுபடுத்தாமல் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.



யாரும் விரும்பி ஊனம் அடைவது இல்லை. பிறப்பாலோ, வியாதியாலோ, விபத்தாலோ ஊனமடைந்துவிடுகிறது. இங்கிலாந்தைச் சேர்ந்த 43 வயது நிரம்பிய மைக் நியூட்மன் என்பவர் கண் பார்வையற்றவர். பிறக்கும்போதே 'குளுக்கோமா' என்னும் நோயினால் பாதிக்கப்பட்ட இவர் தன்னுடைய 8 ஆவது வயதில் கண்பார்வையை முற்றிலுமாக இழந்தார். தனது குறையைப் பெரிதாக எண்ணாத இவர் கார்ப்பந்தயத்தில் சாதனைகள் படைக்க வேண்டும் என்று எண்ணினார்.


காரை மணிக்கு 200 மைல்கள், அதாவது 312.87 கிலோ மீற்றர் வேகத்தில் ஓட்டிச் சாதனை படைக்க் வேண்டும் என்று விரும்பினார். எல்விங்டன் விமான தளத்தில் நடந்த கார் பந்தயத்தில் மணிக்கு 269 கிலோ மீற்றர் வேகத்தில் ஓட்டிச் சாதனை படைத்தார்.

கண் பார்வையற்ற ஒருவர் 269 கிலோ மீற்றர் வேகத்தில் கார் ஓட்டுவது இதுவே முதல் முறையாகும். ஏற்கனவே இவர் 231.75 கிலோ மீற்றர் வேகத்தில் கார் ஓட்டி சாதனையை படைத்துள்ளார். கார் ஓட்டுவதற்கான சாதனையை யாருடைய உதவியும் இன்றி செய்துள்ள இவர் இந்தச் சாதனையை பி.எம். டபிள்யூ.எம் 5 என்ற கார் மூலம் நிகழ்த்தியுள்ளார்.

இவருடைய சாதனையானது உலக சாதனையாளர்களுக்கான கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. பொதுவாக முதன் முதலாவதாக கார் ஓட்டுபவர்கள் சராசரி வேகத்திலேதான் ஓட்டுவார்கள். ஆனால் நான் அப்படி இல்லாமல் அதிக வேகத்தில் ஓட்ட கற்றுக்கொண்டேன். அதனால்தான் என்னால் இவ்வளவு வேகத்தில் கார் ஓட்ட முடிந்தது என்றார். இவருக்கு கிறிஸ்டன் என்ற மனைவியும், பெக்கி என்ற மகளும், சாம் என்ற மகனும் உள்ளனர். இவருடைய 312.87 கிலோ மீற்றர் வேகத்தில் கார் ஓட்ட. வேண்டும் என்ற கனவு விரைவில் நிறைவேற வாழ்த்துவோமாக!

**மற்றவரின் மனதை நிறைவு செய்யும் வகையில் ஒருவரின் கடமையும் செயலும் அமையப் பெற்றால் அதுவே கடமையின் பரிசாகும்.**
-தியார்க் எலியட்

## குறுக்கெழுத்துப் போட்டி இல - 83



*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 83**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப்பெயர் :- ..............................

முகவரி :- ..............................

..............................

..............................

இங்கே வெட்டுக ------------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)சூரியனை நோக்கித் தவம் செய்யும் மலர். (4)அழகு- இப்படியும் கூறுவர். (5) இவை 64 வகைப்படும். (6)தன் மயிர் நீங்கின் உயிர் கொள்ளாது இம்மிருகம். (8)குளிர்ச்சி. (10)பாதுகை இதை இப்படியும் கூறுவர்.

### மேலிருந்து கீழ்

(1)சுழல் காற்று. (2)அணிகலங்களில் ஒன்று. (3)இலங்கையில் வெளியாகும் பத்திரிகைகளில் இதுவும் ஒன்று. (6)இலங்கையில் உள்ள ஒரு நகரம். (7)அநுமானை இப்படியும் கூறுவர். (9)பாதம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 81 இன் விடைகள்**

### இடமிருந்து வலம்

1.செம்மீன் 4.செண்டு 5.பரிமளம் 6.சப்பி 8.வசை 9.மதன் 10.வாடி 11.சதி

### மேலிருந்து கீழ்

1.செம்படவன் 2.மீகாமன் 3.மண் 4.செம்பியன் 7.சந்ததி 9.மடி

### பரிசுபெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | K.கலைச்செல்வி<br>கைதடி வடக்கு,<br>கைதடி. |
| இரண்டாம் பரிசு | :- | து.நக்கீரன்<br>கே.கே.எஸ்.வீதி,<br>மல்லாகம். |
| மூன்றாம் பரிசு | :- | கே.அரசேஸ்வரன்<br>கலைமகள் வீதி,<br>நல்லூர் வடக்கு,<br>யாழ்ப்பாணம். |

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறுவோரின் பெயர் விபரம்:**

வே.குமாரசுவாமி, கரவெட்டி. க.குருநாதன், கோண்டாவில். L.சுவஸ்திகா, யாழ்ப்பாணம். லோ.அபிராமி, வல்வெட்டி. வி.இளங்கோ, கோப்பாய்.

## பல்,வாய் தொடர்பான நோய்கள் நீங்க 'டிப்ஸ்'

*பூண்டுடன் சிறிது ஓமத்தை நசுக்கிப் போட்டு கசாயமாக்கிச் சாப்பிட்டால் கொட்டாவி குறையும்.

*வெந்நீரில் கல் உப்பைப் போட்டு வாய் கொப்பளித்தால் பல் வலி நீங்கும்.

*அகத்திக்கீரை பற்களுக்கு வலுவூட்டுகிறது.

*பற்சிதை நீங்க பசலைக்கீரையை உண்ணலாம்.

*சுக்கை வாயில் போட்டு மென்றுகொண்டு இருந்தால் பல்வலி குறையும்.

*தினசரி துளசி சாப்பிட்டு வந்தால் வாய்ப்புண் சரியாகும்.

# இராணுவத்தின் அராஜகப் போக்கை சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும்

## யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனாதிபதி ஆட்சிப்பீடம் ஏறிய பின் யாழ்.குடாநாட்டில் நடைபெற்று வருப வற்றை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானிக்கவேண்டும் எனத் தெரிவித்து யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அறிக்கையொன்றினை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த இரண்டு வாரங்களில் மிகவும் மிலேச்சத்தனமான, கையாலாகாத தாக்குதல்களையும், மிரட்டல்களையும் விடுப்பதுடன் மட்டுமல்லாது இராணுவ இயந்திரங்களையும், துப்பாக்கி வேட்டுக்களை யும் எந்தவித முன்னறிவிப்புகளுமின்றி பொதுமக்கள் மீது பயன்படுத்துவது சமாதான காலகட்டத்தில் அநாவசியமானது.

இது எம்மைப் பொறுத்தவரையில் தென்னிலங்கை அரசும், இனவாதிகளுமாக சேர்ந்து அதிகாரத்தை தக்கவைப்பதற்கான அதிகார ஆதிக்கத்தின் மிகவும் கோழைத்தனமான செயற்பாடாகும்.

தொடர்ந்தும் எங்களது பெண்கள் இராணுவ வெறியாட்டத்திற்கு பலியிடப்படுவதையும், அவர்களுடைய உரிமைகள் மீறப படுவதையும் அனுமதிக்கமுடியாது. இது திட்டமிடட ரீதியில் அமைதியான வாழ்வை வாழ எண்ணும் மக்களை தீவகத்திலிருந்து முற்றாக விரட்டியடிப்பதற்கு இராணுவம் செய்யும் சதிச் செயற்பாடாகும்.

எனவே, புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட தர்சினியின கொலைச் சூத்திரதாரிகளான ஸ்ரீலங்கா கடற்படையினரை சர்வதேச சமூகத்தின் நேரடிப்பார்வையில் ஒரு குழுவை அமைப்பது மட்டுமல்லாது, தீவகததிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேற ஆவன செய்யப்படவேண்டும். அவவாறான ஒரு நிலை ஏற்படும் பட்சத்தில்தான் தீவக மக்களின் மனித மாண்பு காக்கப்படும் என்பதை சர்வதேச சமூகம் தனது கருத்தில் கொள்ளவேண்டும்.

அதேவேளையில் கடந்த ஓரிரு நாட்களில் யாழ். நகரப் பகுதியிலும் யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலிலும் நடைபெற்ற காரியங்கள் ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்கிருக்கும் உரிமைகளை இராணுவ சப்பாத்துக்களினால் மிதித்து அடக்க நினைப்பது ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்கு இருக்கின்ற உரிமைகளைப் பறிப்பதற்கு ஒப்பானதாகும்.

எந்த சரித்திரத்திலும் இவ்வாறான அடக்குமுறைகள் மேலோங்கி வெற்றி பெற்றதாக இல்லை என்பதனை ஸ்ரீலங்கா அரசும், அதன் இராணுவ அதிகார மையங்களும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். எங்களுடைய பேராசிரியர்கள், மாணவர்கள், சாரதிகள், பொதுமக்கள், பெண்கள் தாக்கப்படுவதையும் கைதுசெய்யப்படுவதையும் கேள்விப்படும்போது எமது மக்கள் மென்மேலும் உரம் ஏறியவர்களாக விடுதலை வீச்சு அதிகம் கொணடவர்களாக எழுவார்கள். ஆனாலும் யாழ்.குடா நாட்டின் மக்கள் ஒரு பண்பாட்டுக் கலாசாரத்தில் வளர்க்கப்பட்டவர்கள் என்பதால் சற்றுப் பொறுமை காக்கிறார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாவதற்கு முன்பு யுத்த காலங்களில் பண்டிகை நாட்களுக்கென்று ஒரு அமைதி நிலையை அனைவரும் கடைப்பிடிப்பார்கள். ஆனால் அதனை திட்டமிட்டு தென்னிலங்கை அரசும், அதன சகபாடிகளும் இணைந்து இந்த அமைதியான பண்டிகை நாட்களை சீர்குலைப்பதை சர்வதேசம் கவனிக்க வேண்டும்.

மாணவாகளின் கல்விக் கூடங்களுக்கு முன் அனுமதி இன்றி நுழைவது மாத்திரமின்றி துப்பாக்கி வேட்டுககளை சரமாரியாகப் பொழிந்து மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் கைது செய்ய நினைப்பதும், கைதுசெய்வதும் தமிழ் மக்களின் மூலதன்மான கல்வியைச் சிதைக்கும் சதிச் செயலே. அது மாத்திரமன்றி சாத் வீகமாக, தமது ஜனநாயக உரிமைகளுக்காக வெறுமையாச் செல்லும் மாணவர்களையும் பொதுமக்களையும் தங்கள் ஆயுதங்களால் தாக்கி வருவதையும் மக்கள் அறிவார்கள்.

அதுமட்டுமல்லாது இரண்டு ஊடகவியலாளர்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டு மிகவும் கோரமாகத் தாக்கப்பட்டு உடமைகள் பறிக்கப்பட்டு இராணுவ வாகனங்களான பவல் கவச வாகனங்கள் முன் ஓடவிடப்பட்டு விடுவிக்கப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் சர்வதேசத்தின் ஊடக காப்பக மையங்கள் யாழ். குடாநாட்டின் ஊடகவியலாளர்களுக்கு பூரண பாதுகாப்பை கொடுப்பதுடன் இங்கு நடைபெறும் இராணுவத்தின் அராஜகப் போக்கை சர்வதேச மட்டத்திலான செயதித் தாபனங்களுக்கு உண்மையுடன் வெளிப்படுத்த முன்வரவேண்டும் எனவும் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினராகிய நாம் கேட்டுக் கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## தைப்பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் மாவட்ட ரீதியில் நடாத்தப்படும் தைப்பொங்கல் விழா இவ்வாண்டும் யாழ்.மாவட்டத்தின் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய பிரதேசங்களில் கொண்டாடப் படவுள்ளது.

இப்பொங்கல் விழா பொங்கல் நிகழ்வுடனும், விசேட பூஜை நிகழ்வுடனும் ஆரம்பமாகி விசேட பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளுடன் நிறைவு பெறும். (ற-132,133)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

ஆழிப்பேரலையால் உயிர்நீத்த அனைவருக்கும் ஆத்ம சாந்தி வேண்டி நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை (திருவாசக முற்றோதல்) இடம்பெற உள்ளது.

இவ் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையானது எதிர் வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து நண்பகல் 1மணிவரை இடம்பெறவுள்ளது. (ற)

## பிரபாகரனின் சிந்தனைகளை — எண்ணிப்பார்க்கும் தருணம் வந்துள்ளது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவரின் சிந்தனைகளையும் எதிர்பார்ப்புக்களையும் ஆழமாக சிந்தித்துப் பார்ப்பதற்கான தருணம் வந்துவிட்டது என்று எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை எட்டவேண்டும் என்று வலியுறுத்தினார்.

அரசியல் கட்சிகள் தமது தனித்துவத்தைத் தக்கவைத்துக் கொண்டு வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்பது பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்பார்ப்பாகும்.

இதற்காக தெற்கிலுள்ள கட்சிகளுக்கிடையில் ஒரு உடன்பாடு இருத்தல் அவசியமானதாகும்.

அத்துடன் ஜனாதிபதியின் இந்திய விஜயம் இலங்கைக்கு மிக முக்கியமாகும் என்று மஹிந்த சமரசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இடர் முகாமைத்துவத்திற்கு பிரத்தியேக அமைச்சு ஒன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அவர் பாராட்டினார். (த-7)

# உலக வங்கியின் அனுசரணையில் மாணவர்களுக்கு பகல் உணவு

## 2006 முதல் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

பாடசாலைகளில் மாணவர்களுக்கு பகல் உணவை வழங்கும் திட்டத்தை அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்போவதாக கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்த தெரிவித்துள்ளார்.

சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்திற்கென வரவு-செலவுத்திட்டத்தில் 150கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பகல் உணவு வழங்கும் திட்டத்திற்கமைய மாணவர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட திட்டத்துக்கு உலகவங்கி நிதியுதவியை வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

# இராணுவ வீதித் தடைகளால் பொதுமக்கள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்தவண்ணமுள்ளன.

இதன் முதற்கட்டமாக யாழ்.நகரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதுடன் பல காவலரண்களும் புதிதாக அமைக்கப்பட்டு வீதித் தடைகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

கந்தர்மடம் சந்தியில் பலாலி வீதியை ஊடறுத்துச் செல்லும் அரசடி வீதியின் இரு புறத்திலும் நேற்றுமுன்தினம் இரவோடிரவாக மரக்குற்றிகள் போடப்பட்டு வீதித் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, அவ்வீதியால் வாகனங்களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரியவருகிறது. (த-132,133)

# நாட்டை அபிவிருத்தி செய்ய செயற்திறனுடைய படையணி தேவை

## - அதாவுட செனவிரத்ன

(கொழும்பு)

நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக செயற்திறன் கொண்ட படையணியொன்று தேவைப்படுவதாக தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை முதலாம் இடத்திலும், கைத்தொழில்துறை இரண்டாம் இடத்திலும், ஏனைய தொழிற்துறைகள் மூன்றாம் இடத்திலும் உள்ளதாக தெரிவித்த அமைச்சர்,

எயிட்ஸ் நோய் தொடர்பாக அனைவரும் விழிப்படைய வேண்டுமென்றும் இந்த நோயிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்றும் எச்சரித்துள்ளார். (ற-9)

# கடன் வழங்கும் நிகழ்வு

(பொன்னாலை)

யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் வட்டியில்லாக் கடன் திட்டத்தின் கீழ் அராலி மத்தி- ஊரத்திக் கிராமத்தில் 10 பயனாளிகளுக்கு கடந்த திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கடன்கள் வழங்கப்பட்டன.

அராலி- மத்தி- செந்தமிழ் சனசமூக நிலைய மண்டபத்தில் கடன் வழங்கும் நிகழ்வு மேற்படி இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தலைவர் எஸ்.இன்பம் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் 5000 ரூபா வீதம் கடன்கள் வழங்கப்பபட்டன. (த-49)

# மக்கள் தொடர்புப் பணிமனையை புனரமைக்க கடற்படை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் மக்களால் அடித்து நொருக்கப்பட்ட மக்கள் தொடர்புப் பணிமனையை புனரமைத்துத் தருமாறு கடற்படையினர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் புங்குடுதீவு சந்தைப் பகுதியை சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய கடற்படையினர் மேற்படி சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிலரைக் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்ட சுமார் 10ற்கும் மேற்பட்டோரை மடத்துவெளியில் அமைந்துள்ள கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று இவ்வேண்டுகோளை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, அவ்வாறு புனரமைத்துத் தர மறுத்தால் புங்குடுதீவு மக்களை சுமுகமான சூழ்நிலையில் வாழவிடமாட்டோம் என கடற்படையினர் எச்சரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்
2006இல் 5ந் தரப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களே! உங்கள் நன்மை கருதி
2006 ஜனவரி முதல் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும்
புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்
உங்கள் வலம்புரியில் வெளிவரும்!
வாங்கத் தவறாதீர்கள்!

# இலங்கை 259 ஓட்டங்களால் தோல்வி; தொடரைக் கைப்பற்றியது இந்தியா!

இந்திய -இலங்கை அணிகளுக் கிடையில் அகமதாபாத்தில் நடை



பெற்ற மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இந்தியா அணி 259 ஓட்டங்களால் வெற்றி பெற்று 3 போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற் றது.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி தனது முதலா வது இன்னிங்ஸில் சகல விக்கெட் டுக்களையும் இழந்து 398 ஓட்டங் களைப் பெற்றது.

இந்திய அணி சார்பாக வி.வி. எஸ்.லக்ஸ்மன் பொறுப்புடன் துடுப பெடுத்தாடி 104 ஓட்டங்களையும் மற்றும் பதான் 82, டோனி 49 ஓட் டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் முரளிதரன் 3 விக் கெடுக்களையும் மற்றும் மலிங்க 3, மகரூப் 2, பண்டார தலா 2 விக் கெட்டுக்களையும் வீழத்தினர்.

இதையடுத்து தனது முதலா வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தா டியே இலங்கை அணி ஹர்பஜ னின சுழலில் 206 ஓட்டங்களைப பெற்று சகல விக்கெட்டுக்களை யும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் டில்சான் 65 ஓட்டங்களையும் மற்றும் அத்தப் பத்து 41, சங்கக்கார 40 ஓட்டங்க ளையும பெற்றனர். இந்திய அணி இலங்கை அணியை விட முதலா வது இன்னிங்ஸில் 192 ஓட்டங்க ளால் முன்னிலையில் உள்ள நிலையில் தனது இன்னிங்ஸில் இரண்டாவது துடுப்பெடுத்தாடியது. ஆரம்பத்தில் தடுமாறினாலும் யுவ ராஜ்சிங்கின் துடுப்பாட்டத்தால் 9 விக்கெட்டுக்களை இழந்து 316 ஓட்டங்களைப் பெற்றுத் தனது இர ண்டாவது இன்னிங்ஸை நிறுத்தி துடுப்பாட்டத்தில் யுவராஜ்சிங் 75 ஓட்டங்களையும் மற்றும் அகாகர் 48, ஹர்பஜன்சிங் ஆட்டமிழக்கா



மல் 40 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் முரளிதரன், பண்டார ஆகியோர் தலா 3 விக்கெட்டுக் களையும் மலிங்க, மகரூப், டில் சான் ஆகியோர் தலா 1 விக்கெட் டுக்களையும் கைப்பற்றினர். இல ங்கை அணி 509 ஓட்டங்கள் என்ற இமாலய இலங்கை நோக்கி துடுப் பெடுததாடி கும்ளே, ஹர்பஜனின் சுழலில் 249 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 259 ஓட்டங்களால் தோல்வியடைந்து,

துடுப்பாட்டத்தில் டில்சான்



65 ஓட்டங்களையும் மற்றும் ஜெய வர்தன 57, உப்புல் தரங்க 47 ஓட் டங்களையும் பெற்றனர். பந்துவீச் சில இந்திய அணி சார்பாக கும்ளே 5 விக்கெட்டுக்களையும் மற்றும் ஹர்பஜன் 3 விக்கெட்டுக்களை யும் பதான், அகாகர் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

இந்திய அணி இப்போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி யது, ஆட்டநாயகனாகப் போட்டி யில் 10 விக்கெட்டுக்களைக் கைப பற்றிய ஹர்பஜன்சிங்கும், ஆட்



டத் தொடர் நாயகனாக தொடரில 21 விக்கெட்டுக்களைக் கைப்பற் றிய அனில் கும்ளேயும் தெரிவா னார்கள். (த-39)

# ஐ.சி.சி. தரவரிசைப் பட்டியலில் 2ஆவது இடத்திற்கு இந்தியா முன்னேற்றம்

இலங்கை அணியுடனான தொடரை 2-0 என்ற கணக்கில் வென்றதன் மூலம் இந்திய அணி ஐ.ஐ.சி தரவரிசைப் பட்டியலில் 2ஆவது இடத்திற்கு முன்னேறி யுள்ளது.

இந்திய அணி முன்னதாக 112 புள்ளிகளுடன் இருந்தது. தற்போது 115 புள்ளிகளைப் பெற்றுள்ளது. ஐ.சி.சி நேற்று வெளியிட்ட தரவரி சைப பட்டியலின் படி இலங்கை அணி இத்தொடரில் 5 புள்ளிகளை இழந்து தரவரிசையில் 7 ஆவது இடத்திற்குப் பின் தள்ளப்பட்டுள் ளது.

ஐ.சி.சி. தரவரிசைப்பட்டியலில அவுஸ்திரேலியா 128 புள்ளிகளு டன் முதலாவது இடத்திலும் இந் தியா 115 புள்ளிகளுடன் இரண்டா வது இடத்திலும் உள்ளன. இங்கி லாந்து 113, பாகிஸ்தான் 103, தென்னாபிரிக்கா 100, நியூசிலாந்து 100, இலங்கை 96, மேற்கிந்திய தீவு கள் 73, சிம்பாவே 27, பங்காளதேஷ் 5 புள்ளிகளையும் பெற்றுத் தரவ ரிசைப் பட்டியலில உள்ளன. (த-39)



ரஷ்யாவின் மரியா ஷரபோவா, டெனிஸ் போட்டிகளின் விடுமுறையில், ஜப்பானுக்குச் சுற்றுலாச் சென்றுள்ளார். இவர் ஒசாகாவில் புதன்கிழமை நடைபெற்ற டெனிஸ் போட்டியில் கலந்து கொள்வதற்காக ஒய்யாரமாக நடந்து செல்கின்றார்.

## கலாசார மண்டபம் அமைக்கப்படும்

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சங்குவேலி கிராமத்தில் நியாப் திட்ட நிதி யுதவியுடன் புதிய கலாசார மண் டபமொன்று நிறுவப்படவுள்ளது.

இம் மண்டபத்திற்கான அடிக் கல்லை உடுவில் பிரதேச செய லர் எஸ்.திருவாகரன் அண்மை யில் நாட்டி வைத்தார்.

இக்காலாசார மண்டபத்தை அமைப்பதற்கு சுமர் 10 இலட் சம் ரூபா நிதியை நியாப் நிறு வனம் ஒதுக்கீடு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-49)

## தொலைபேசி இணைப்பு

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு புதிதாக தொலைபேசி இணைப்பு வழங்கப் பட்டுள்ளது. தொலைபேசி இணைப் புக்கான நிதியை மாகாண சுகா தார சேவைகள் திணைக்களம் வழங்கியிருந்தது.

அவசர வைத்திய சேவைகள் மற்றும் அம்புலன்ஸ் சேவைக ளைப் பெறுவதற்கு இது இலகு வானதாக உள்ளதென்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக் கின்றன. (த-49)

# ஆறாவது அகவை நிறைவு

## தமிழர் தேசத்தில் தர்மத்தின் காவலனாய் எழுக!

அகவை ஆறினை நிறைக்கும் வலம்புரியே
ஆசையோடு உன்னை வாழ்த்துகிறேன்
நிறைவான இதழாய் பொலிகின்றாய்
நீதியைச் சுமந்து வருகின்றாய்
இறையாசி பெற்று வளர்கின்றாய்
ஈழவர் நெஞ்சில் வாழ்கின்றாய்
மறையான தமிழைப் பொழிகின்றாய்
மாற்ற மொன்றுக்காய் நாளும் உழைக்கின்றாய்

தர்மத்தின் காவலனாய் எழுகின்றாய்
தரணியை நீயிங்கு ஆள்கின்றாய்
அதர்மத்தை களைந்திட எழுகின்றாய்
ஆயிரம் விருதுகள் பெறுகின்றாய்
மக்களின் நாளேடாய் வருகின்றாய்
மாண்புடை செய்திகளைத் தருகின்றாய்
பக்கங்கள் பெருக்கியே விரிகின்றாய்
பரந்த செய்திகளைத் தருகின்றாய்

தேசியம் பேணியே வாழ்கின்றாய்
தேசத்தின் கண்களில் தெரிகின்றாய்
ஆசிகள் பெற்று நீ உயர்கின்றாய்
ஆன்றோர்கள் போற்றிட மலர்கின்றாய்
மாசற்ற வழிகளை சொல்கின்றாய்
மானுடம் வாழ உழைக்கின்றாய்
நீதி தேவனாய் எமை ஆளுகின்றாய்
நிரந்தர தீர்வுக்காய் உழைக்கின்றாய்

மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்.

## அகவை ஆறில் தகைமை நூறு

வலம்புரி சங்குநாதமே! - உலகை
வலம் வரும் எங்கள் நாதமே!
சிக்கல்கள் நிறைந்த நாட்டில்
சிக்கெனப் புறப்பட்டவளே!
நிற்பாயோ? நடப்பாயோ? என
நினைத்திட்ட வேளையிலே
அகவை ஆறில் நீ - நூறின்
தகைமையோடு பறந்திடும் மிடுக்கு
பிறந்த நாளாம் உனக்கு
சிறந்த நல்வாழ்த்துத் தந்தோம்
நிறைந்து நீ வாழியவே!
இருப்பதை இருட்டடித்து
இல்லாததை இட்டுரைக்கும்
இலாப நோக்கின்றியே
வலம் வரும் எங்கள்
வலம்புரி நீ வாழியவே!
பகட்டான செய்தியின்றி - நெஞ்சு
படபடக்கும் செய்தியின்றி - எதையும்
பக்குவமாய் பரிந்துரைக்கும்
வலம்புரி நீ வாழியவே!
சமூகத்தை வழிநடத்த
சுமுகமாக நடைபோட்டு - பலரின்
அமோக வாழ்த்தோடு வாழும்
வலம்புரி நீ வாழியவே!
பத்திரிகை தர்மத்தை
பத்திரமாய் காத்துவரும்
பத்திரிகையே எங்கள்
வலம்புரி நீ வாழியவே!
எம் வீட்டு விறாந்தையில்
விளிக்குமுன்னே வந்துநின்று - நல்
வாழ்வுக்கு வளம் சேர்க்கும்
வலம்புரியே நீடுழி நீடுழி - சர்வ
பலத்தோடு வாழிய வாழிய வாழியவே!

திருமதி சுதாகரன் வாசுகி
திருநெல்வேலி.

## உறுதியெனும் ஊக்கி

ஒற்றையடிப் பாதையூடேதான்
அவர்களது பயணம்
ஆரம்பித்திருந்தது!

அப்போது அவர்களுக்குத் துணை
அவர்கள் பயணிக்கும்
வாகனம் மட்டுமே

பொறிக்கிடங்குகளுக்கு
மேலாகவும் உறுதியோடு
பயணித்தார்கள்

அக்கில் முள்ளையும்
அவசரமில்லாத புத்தி
முறியடித்தது.
வீதித் தடை
போட்டவர்களையும்
கதைத்து, சமாளித்து
மெதுவாக முன்னேறினார்கள்

பயண முடிவில் கண்டது
வரவேற்கும் கரங்களுடன்
வழிமறித்த முகங்களையே!

ந. வினோதரன்,
மிருசுவில்.

நண்பர்களில் பலரகம் உண்டு. எல்லா நண்பர்களும் முதலில் இருந்து கடைசிவரை நம்முடன் நட்புப் புரிபவர்கள் அல்ல. சில நண்பர்கள் தோன்றுவார்கள். நீங்குவார்கள். வாழ்க்கையில் பலவித நண்பர்கள்!

- சுவாமி இராமதாசர்

வலம்புரி

## இந்தியாவை நோக்கிய காய் நகர்த்தல்

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் சமாதானப்பேச்சுக்களை இந்தியாவுடன் நடத்தும் முயற்சிகளை மேற்கொண்டுவருவது தெளிவாகின்றது.

நோர்வேயின் சமாதான அனுசரணைப் பணியை ஓரங்கட்டுவதும் இந்தியாவின் உதவியுடன் உலகநாடுகளுக்கு சமாதான முன்னெடுப்பு இடம்பெறுவதாக காட்டுவதுமே ஜனாதிபதி மகிந்தவின் நோக்காக இருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியில் விடுதலைப்புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள்-அதன் முன்னேற்றங்களுக்குப் பின்னணியில் நோர்வேயின் பங்களிப்பு கணிசமானது.

அன்றைய பேச்சுவார்த்தையே யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு வழிவகுத்தன.

யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து அமுலில் இருப்பதற்கு நோர்வேயின் தொடர்ச்சியான சந்திப்புக்கள் காரணமாக இருந்தன.

இந்நிலையை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவும் தனது ஆட்சியில் தொடர்ந்து பேணிவந்தார்.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரின் அரசியல் துணையான ஜே.வி.பியும் நோர்வேயின் அனுசரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு பங்கம் ஏற்பட்டுள்ளது.

சமாதான முயற்சியில் இருந்து நோர்வேயை வெளியேற்ற வேண்டுமென்பதற்காக ,இந்தியாவை உள்ளீர்க்கும் மகிந்தவின் காய் நகர்த்தல் எந்தளவு தூரம் வெற்றியைத் தரும் என்பதை பொறுத்திருந்தேபார்க்க வேண்டும்.

சமாதான முயற்சியில் இருந்து நோர்வேயை வெளியேற்றுவதில் கடினமான திட்டமிடல்கள் தேவையில்லை.

ஆனால் , நோர்வேயை வெளியேற்ற முற்படுவதால் ஏற்படக்கூடிய சமாதானப் பின்னடைவுகள் , யுத்தநிறுத்த மீறல்கள் பற்றி மகிந்த சிந்திக்கத் தவறினால் இந்தியாவின் அனுசரணைக்கு இடமில்லாது போகும்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சை நடத்துவதற்கு இந்தியாவை விடுதலைப்புலிகளும் அரசும் விரும்பின.

ஆனால் அதற்கு இந்தியா இம்மியும் சம்மதிக்க வில்லை.

இந்தியா மறுத்த காரணத்தினாலேயே பேச்சுவார்த்தை தாய்லாந்தில் நடைபெற்றது. இருந்தும் பேச்சுக்களின் விபரங்கள் அவ்வப்போது நோர்வேயினால் இந்தியாவுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

விடுதலைப்புலிகளுடன் ஒரு புறத்தில் பேச்சுவார்த்தை நடத்திய ரணில் மறுபுறத்தில் மிலிந்த மொறகொடவின் உதவியுடன் அமெரிக்காவை நாடினார்.

இது இந்தியாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. தனது தலையீடு இலங்கையில் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதை இந்தியா மீண்டும் விரும்புகின்றது.

இதற்கு மகிந்தவின் ஆதரவும் இருப்பதால் சமா தானப் பேச்சுக்கள் இந்தியாவின் அனுசரணையுடன் இடம்பெறுவதே தமக்குச் சாதகம் என்ற நிலையில் மகிந்தவின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

# பேச்சு இடம்பெறும் இடம் குறித்து குழப்பமடையத் தேவையில்லை

## பி.பி.ஸி.பேட்டியில் எரிக் சொல்ஹெய்ம்

(கொழும்பு)

**புதி அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கவேண்டிய இடம் குறித்து குழப்பம் அடையத் தேவையில்லையென்று நோர்வே அரசின் அமைச்சரும் இலங்கையின் சமாதானத்துக்கான விசேட தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**



பி.பி.ஸிக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே எரிக் சொல்ஹெய்ம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் இடம் பிரதான சிக்கல் வாய்ந்ததாக இல்லை பேச்சுவார்த்தைக்காக இரு தரப்பினரும் இணங்குகின்ற எந்தவொரு இடமும் சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும். பேச்சுக்கான இடத்தை இரு தரப்பினரும்தான் முடிவு செய்யவேண்டும் இதில் நோர்வே அரசு தலையிடாது.

பேச்சுவார்த்தை மேசைக்கு இரு தரப்பினரையும் கொண்டு வருவதற்காக நோர்வே மிகுந்த அக்கறையுடன் செற்படுகிறது.

போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிக்கவேண்டும் ஏனெனில் தற்போது போர் நிறுத்த உடன்படிக்கை ஆபத்தான கட்டத்தில் சென்று கொண்டிருக்கின்றது. இதனைப் புரிந்து கொண்டு இருதரப்பினரும் செயற்படவேண்டும். அப்போதுதான் போர் நிறுத்த உடன்படிக்கை யைச செம்மையாக அமுல படுத்த முடியும் என்றும் எரிக் சொல்ஹெய்ம் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8)

# சுனாமி மீள்கட்டுமானச் செயற்பாடுகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் முறைகேடு

## ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆழிப்பேரலை செயற்பாடுகளை மேற்கொள்வதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளன என்று ஜாதிக ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் இது தொடர்பில் கூறுகையில்,

தெனகடலோரப் பகுதிகளை நாம் அண்மையில் பார்வையிட்டோம். அரச சார்பற்ற நிறுவனங்கள் முறையாகப் பணிகளைச் செய்யவில்லை.

சர்வதேச சமூகத்திடமிருந்து அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏராளமான நிதியைப் பெற்றுள்ளன. வீடுகள், பாடசாலைகள், வீதிகளை அரசாங்கத்தின் உதவி இல்லாமலேயே மீளமைத்து விட்டதாக கூறுகிறார்கள் ஓராண்டு ஆகிவிட்ட நிலையிலும் எதுவும் அங்கே செய்யப்படவில்லை என்றார்.

இதனிடையே நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைபுத் திட்டங்கள நிறைவடையாமைக்கு அரச சார்பற்ற நிறுவனங்களே காரணம் என்றும் குற்றம் சாட்டியுள்ளார். (ந)

# இராணுவத்தின் அடாவடிகளைக் கண்டித்து கிளிநொச்சியில் 2 ஆம் நாளாகவும் பேரணி

(கிளிநொச்சி)

புங்குடுதீவில் தர்சினி என்ற யுவதி கடற்படையினரால் பாலியல வன்புணர்விற்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் யாழ். பல்கலைக்கழக சமூகத்தினா மீதான இராணுவத் தாக்குதலைக் கண்டித்தும் கிளிநொச்சியில் உள்ள பொது அமைப்புக்கள் நேற்று 11.00 மணியளவில் கண்டனப் பேரணியொன்றை நடத்தின.

தமிழ் மக்கள் மீதான அனைத்து வன்முறைகளையும் உடன் நிறுத்தக்கோரும் வாசகங்களைத் தாங்கிய சுலோகங்களை ஏந்தியவண்ணம் பெருந்திரளான மக்கள் கலந்து கொணட இந்த ஊர்வலம் கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியத்தில் இருந்து ஆரம்பமாகி போர் நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகத்தைச் சென்றடைந்தது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது. இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் இராணுவத்தின் அடாவடிகளைக் கண்டித்து கிளிநொச்சயில் நேற்று முன்தினமும் இவ்வாறான பேரணியொனறு நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந)

# யாழில் இராணுவ வன்முறைகளுக்கு பொது ஊழியர் முன்னணி கண்டனம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் வன்முறைகளுக்கு அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளது.

முனனணியின் தலைவர் எஸ்.லோகநாதன் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பதால் இங்கு வாழும் சகல இன மக்களுக்கும் சம உரிமை அளிக்கப்படவேண்டும்.

தென்பகுதியில் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் போது மௌனமாகவுள்ள இராணுவத்தினர் ,வடக்கு-கிழக்கில அகிம்சை வழியில் அமைதியான முறையில் ஊர்வலம் நடாத்தும் போது ஏன் அடாவடித்தனம் செய்கினறனர் ?

போர் நிறுத்த ஒப்பந்தத்தை படையினர் ஒருபோதும் மீறவில்லையென மார்தட்டும் அரசாங்கம் யாழ். நகரில் கல்விச் சமூகத்தின் மீது படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலை என்னவென்று கூறப்போகிறது.?

படையினரால் திட்டமிட்ட முறையில் கல்விச் சமூகம் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

இதுவிடயம் தொடர்பாக தீவிர விசாரணை நடாத்தி படையினரின் விரும்பத்தகாத செயலைக் கட்டுப்படுத்தி போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாத்து சமாதான முயற்சிகளை மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ந)

# அரசியல்வாதிகள் 110 பேருக்கு எதிராக இலஞ்ச குற்றச்சாட்டுகள்

(கொழும்பு)

110 அரசியல்வாதிகளுக்கு எதிரான இலஞ்சக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பட்டியலில் ஆளும் பொதுமக்கள் கூட்டமைப்பின் முன்னாள் அமைச்சர்கள் 12 பேர், ஐக்கிய தேசியக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்களை உள்ளடக்கிய 30 உறுப்பினர்கள், மாநகர, நகர பிரதேச சபையின் 60 உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களில் ஒரு சிலர் மீது ஒன்றுக்கும் மேற்பட்ட இலஞ்ச முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. (ந)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



எப்போது தொல்லை தோன்றினாலும் "நீ மாயை வெறும் தோற்றம். உண்மை அல்ல என்பது எனக்குத் தெரியும்" எனறு சொல்ல வேண்டும். எல்லையற்ற ஆற்றல் உண்மை, நிறைவு இவை நமதே. இவற்றை நாம் பெறவேண்டியதில்லை ஏனெனில அவை நம்முடையவையே அவற்றை வெளிப்படுத்த வேண்டும் அவ்வளவுதான்.

சுவாமி விவேகானந்தர்

## கொடிகாமத்தில் பொலிஸ்மீது தாக்குதல்

கொடிகாமம் பொலிஸ் நிலையம் மீது நேற்றிரவு 4 கைக்குண்டுகள் வீசப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து பொலிஸ் நிலையம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்த விபரங்களை வெளியிட பொலிஸார் மறுத்து விட்டனர். (ச-4)

## அனுமதித் தேர்வு பிற்போடப்பட்டது

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பத்திரிகையியல் டிப்ளோமா முழுநேரக் கற்கை நெறிக்காக நாளை நடைபெறவிருந்த அனுமதித் தேர்வு மறுஅறி வித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அறிவித்துள்ளார். (ச)

## யாழ்ப்பாணத்தில்...

காலத்திலும்கூட மக்களின் இயல்பு வாழ்க்கை மறுக்கப்பட்டு மேலதிக படைகள் குவிக்கப்பட்டு இராணுவ வன்முறைகள் அதிகரித்துள்ளமையானது மக்களிடையே பீதியான உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களிடையான திட்டமிட்ட தொடர்சியான தாக்குதல்களையும் சித்திரவதைகளையும் இராணுவம் மேற்கொண்டு வருகின்றது. தமிழ்க் கல்வியாளர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினரை இராணுவத்தினர் மிகவும் கீழ்த்தரமாக நடத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், விரிவுரையாளர்கள்,பேராசிரியர்கள், மாணவர்களைத் தாக்கியும் துப்பாக்கிச் சூடும் நடத்தியும் இராணுவம் பதற்றமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கட்டுப்படுத்த முடியாத அமைதியற்ற சூழலை இச்சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.இந்த முழுச்சம்பவங்களுக்கும் சிறிலங்கா இராணுவமே பொறுப்பு.

இது விடயத்தில் நோர்வே உடனே தலையிட்டு மக்கள் மீதான இராணுவ வன்முறைகளைத்தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த உரிய அழுத்தம் கொடுக்குமாறும் நாம் வேண்டுகின்றோம்.

இப்படியான மோசமான சூழ்நிலையில் பொறுமையிழந்தநிலையில்விரக்தியுடன் தமிழ் மக்கள் உள்ளனர். அமைதியை விரும்புகின்ற தமிழ் மக்களின் வாழ்க்கையில் இயல்பு வாழ்க்கையைமீளக் கொண்டு, இராணுவத்தையும் இராணுவத் தடைகளையும் விலக்க சர்வதேச சமூகம் தார்மீக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் தமிழர் தாயகத்தில் அமைதி நிலவ அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தங்களை வேண்டுகின்றோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-4)

## நவரட்ணத்துக்கு நாட்டுப்பற்றாளர் நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று அதிகாலை சுட்டுக் கொல்லப்பட்ட சின்னத்தம்பி கிருஷ்ணர் நவரட்ணத்துக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் நாட்டுப்பற்றாளர் நிலை வழங்கி சிறப்பித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைஅலுவலகம் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.தேச விடுதலையை உயிர் மூச்சாக கொண்டு செயற்பட்ட சின்னத்தம்பி கிருஷ்ணர் நவரட்ணத்துக்கு நாட்டுப்பற்றாளர் நிலை வழங்கி கௌரவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் இவருக்கு தமது வீர வணக்கத்தை தெரிவிக்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச)

# இராணுவம் மீது பரவலாகச் சூடு...

இராணுவத்தினர் 5 மேற்பட் டோர் காயமடைந்துள்ளனர். தொடரும் இராணு வத்தின் தாக்குதலில் யாழ்.மக்கள் மரண பயத்தில் உள்ளனர்.

எவ் வேளையில் என்ன நடக்குமோ என்ற அச்சம் காரணமாக மக்கள் வீதிக்கு வர அஞ்சுகின்றனர். இதனால் யாழ்.குடாநாட்டில் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

இதேவேளை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்து கண்காணிப்புக் குழுவிற்கு முறையிட்ட போது அவர்கள் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாமல் மௌனம் சாதிப்பதாக மக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.இதே வேளை தட்டாதெருவிலும் யாழ்ப்பாண ஐந்துசந்திப் பகுதியிலும் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலினை அடுத்து யாழ் நகரக்கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. அப்பாதையூடானபஸ் சேவைகள் வேறுபாதையூடாகபோக்குவரத்தில் ஈடுபட்டன.

### சிவலிங்கப்புளியடியில்

யாழ்.இந்துக்கல்லூரிக்கு அருகில் காங்கேசன்துறை வீதியில் நேற்று மாலை 3.45 மணியளவில் இராணுவத்தினருக்கும் இனந்தெரியாத நபருக்கும் இடையில் நேரடி மோதல்சம்பவம் இடம் பெற்றது.

விடுமுறைக்குச் சென்று கொண்டிருந்த இராணுவத்தின் பேருந்து ஒன்று மீது கைக்குண்டு வீச்சுத் தாக்குதல் நடைபெற்றது. அதனையடுத்து துப்பாக்கித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன் பின்னர் இரு தரப்பினருக்கும் இடையில் சில நிமிடங்கள் துப்பாக்கிச் சமர் இடம் பெற்றது. இச் சம்பவத்தையடுத்து யாழ்.நகரின் வீதிப்பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரும் ஐந்து சந்திப்பகுதியில் இருந்த இராணுவத்தினரும் தாக்குதல் இடம் பெற்ற இடத்துக்கு விரைந்து சென்றனர்.

சம்பவத்தின் போது இராணுவத்தினருக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாத போதும் அவர்கள் பயணம் செய்த பேருந்துக்கு சேதம் ஏற்பட்டிருப்பதாக இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவத்தையடுத்து இராணுவத்தினர் பொதுமக்கள்மீது தடியடிப் பிரயோகம் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் 5 பொதுமக்கள் காயமடைந்தனர்.

என்.நிசாந்தன்(வயது-28), எவ்.எக்ஸ் அனுஷ்டன்(வயது-28), என்.தெய்வேந்திர ராஜா(வயது-39),எம்.மகேஸ்வரன், க.கணேசலிங்கம் (வயது-40) ஆர்.ஸ்ரீபன்(வயது-27) என்பவர்களே படுகாயமடைந்தவர்களாவர் .

### ஐந்து சந்திப் பகுதியில்

யாழ்.ஐந்து சந்திப்பகுதியில் இராணுவத்தினர் மீது நேற்றுப் பகல் இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன்போது இராணுவத்தினரும் திருப்பித் தாக்கினர்.

சில நிமிடங்கள் தொடர்ந்த இச்சம்பவத்தையடுத்து கனரக வாகனங்களில் அப்பகுதிக்கு விரைந்த மேலதிக இராணுவத்தினர் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்ததுடன் சுற்றிவளைப்புத் தேடுதல்நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன் போது வீதியால் சென்ற பலரும் தாக்கப்பட்டனர். முச்சக்கரவண்டி ஒன்றும் சேதமடைந்தது. இதனையடுத்து யாழ்.நகரக்கடைகள் இழுத்து மூடப்பட்டன.

மக்கள் அவசர அவசரமாக பதறியடித்தவாறு வீடுகளுக்கு ஓட்டம் எடுத்தனர்.

### அரியாலையில்

அரியாலையில் இராணுவக்காவல் அரண் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது ஒரு இராணுவச் சிப்பாய் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

### கோப்பாயில்

கோப்பாய் பகுதியில் இராணுவத்தினர் மீது நேற்று மாலை 3.45 மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

### நல்லூரில்

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலடியில் வைத்து இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்த இருவரும் உடனடியாக பலாலி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

நல்லூர் முத்திரைச்சந்திக்கு அருகில் நேற்று மாலை 6 மணியளவில் காவலுக்கு நின்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து தெரியவரவில்லை.

### அச்சுவேலியில்

அச்சுவேலி பேருந்து நிலையத்துக்கருகில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் இராணுவீரர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து இராணுவத்தினரால் மக்கள்பலர் தாக்கப்பட்டனர்.

### கந்தர்மடத்தில்

கந்தர்மடம் அரசடிச் சந்தியில் நண்பகல் இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து இராணுவத்தினர் திருப்பித்தாக்கியதில் இரு இளம் பெண்கள் காயமடைந்துள்ளனர். இவர்கள் இருவரும் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ச-8,

## தமிழ்த் தேசிய...

ஸாருக்கு உத்தரவிட்டார். இதேவேளை கடந்த அக்டோபர் 11ஆம் திகதி தமிழ்த் தேசிய எழுச்சி நடவடிக்கைக்குழுவின் கோப்பாய் கோட்ட அமைப்பாளர் எம். சிவகடாட்சம் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-43)

## மன்னார் பள்ளிமுனை...

தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது ருக்மன் சிகராணுவ (வயது 25) ஏன்ற மீனவர் காயமடைந்து. மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத் தாக்குதல் சம்பவத்தினையடுத்து அப்பகுதியில் இராணுவத்தினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் சந்தேகத்தின் பேரில் 9பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை மன்னார் நகரப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் தீர்த்த எச்சரிக்கை வேட்டுக்களை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்ற சூழ்நிலை ஏற்பட்டது.

நகரில் திறந்திருந்த கடைகள், அலுவலகங்கள் பூட்டப்பட்டு வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. இதனைத் தொடர்ந்து மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை நேரடியாக மன்னார் கடைவீதி மற்றும் பள்ளிமுனைப்பகுதிக்கு சென்று படை அதிகாரிகள்மற்றும்யுத்தநிறுத்தக்கண்காணிப்புக்குழு அதிகாரிகள் ஆகியோருடன் தொடர்பு கொண்டுபொதுமக்களுக்குபாதிப் புக்களை ஏற்படுத்துவதை தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். கைது செய்யப்பட்ட பொதுமக்களை விடுதலை செய்யும் நடவடிக்கைகளிலும்அவர்ஈடுபட்டார். (ச-4)




மனோகரா யாழ்.
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடாக
சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த
ஆறு
காட்சி நேரம்: 10.30, 1.30, 4.30
7.30, 10.30 (பு.நே)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.